உ

சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை க. | காரைக்குடி துந்துபிஞு தைமீ க௰உ | மணி ௯.

வணக்கம்.

விநாயகர்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

—கச்சியப்ப சிவாச்சாரியார்.

முருகக்கடவுள்.

முருகோட்டந் தரப்பாயு மும்மதமும்
ஊற்றெடுப்ப முரிவிற் கோட்டும்
ஒருகோட்டு மழகளிற்றை இருகோட்டு
முதுகளிறு வுலவக் காட்டிப்
பருகோட்டு நறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்திற் பரண்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட்
டத்தடிகள் குலத்தாள் போற்றி.

—சிவஞானயோகிகள்.

சபாநாயகர்.

வண்டாட விரியிதழி மலராட வயங்குமதித்
துண்டாட நதியாடத் துன்னியகம் மன்னைவிழி
கண்டாட வடியரின்பக் கடலாட விருமுனிவர்
கொண்டாடக் கூத்தாடுங் குஞ்சிதபா தம்போற்றி.

—பூ.ரா. கந்தசாமிக்கவிராயர்.

பொருணூற் சிறப்பு.

(பண்டிதர்-மயில்வாகனனார் B. Sc. London எழுதியது.)

யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத்தார் முன்னிலையிற் படிக்கப்பட்டது.

ஒருமொழியா லுலகனைத்து முருப்படுமென் றருஞ்சுருதி
புணர்ந்த வாற்றால்
வருமறையா கமக்கலையாய்ப் பொருட்டுணிவா
யாவுமாய், வயங்கா நின்ற
திருமொழியைச் சித்திபுத்தி திகழ்மொழியை
யனவரதஞ் சிந்தித் தேத்தும்
பெருமொழியைக் குருமொழியைப் பிறைமுடித்தோன்
பெறுமொழியைப் பேணி வாழ்வாம்.

அருந்தமிழ்ப் பொருணூற் சிறப்பிலொரு சிலவற்றை யாராய்ந் தறியப் புகுந்தனம்.

"ஆன்ற சிறப்பி னறம்பொரு ளின்பமென
மூன்றுவகை நுதலிய துலக மவற்று
ளறனு மின்பமு மகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே"

என்பது பன்னிருபடலம். "மூன்றுவகை நுதலியதுலகம்" என்றதனால் அறிஞர் வீட்டினைத் தனித்துக்கூறார் ஏனைய பொருட் பகுதிகளோடு சார்த்தி அவற்றது மிகுதியாகவும் நீக்கமாகவுங் கூறுவரென்பது பெறப்பட்டது, என்னை, சிற்றின்பம் பேரின்பம் எனவும், இல்லறம், துறவறம் எனவும், இம்மைப் பொருள், மறுமைப்பொருள் எனவுங் கூறினாராகலின். இவற்றது விரிவைப் பின்னர்க் காட்டுதும். "அறனு மின்பமு மகலாதாகி" என்பதனால் புறத்திணை அனைத்துப் பொருளையுங் கூறமென்பதும் நடுவண் நின்ற பொருளையே பெருகக் கூறுமென்பதும் பெறப்படுவனவாம்.

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்போடு புணர்ந்த வைந்திணை"

என்பது தொல்காப்பியம். "அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்ற
தனால் எஞ்சிய இருதிணையுட் கைக்கிளைத்திணை ஒருதலையாய அன்
பினை யுரைப்பது என்றும், பெருந்திணை பொருந்தா அன்பின்
புறத்ததாய்ப் பொருந்தநின்ற அறனும் பொருளுந் துறக்கமுங்
கூறுவது என்றும் அறியலாகும். இங்ஙனம் அகமும் புறமும்
ஒற்றுமைப்பட்ட பொருளவாயின் இணைச்சொற்களால் வேற்று
மைபுறக் கூறிய தென்னையோவெனின், இணைச்சொற்களாற் கூறப்
படும் பொருட்கள் ஒற்றுமையும் வேற்றுமையு முடையவா யிருத்த
லன்றோ சால்பு; கண்டு உணரப்படும் பொருளை நோக்க அகமும்
புறமும் ஒன்றாந்தன்மைய; உணர்வோனாகிய தலைமகனை நோக்க
வேறாந்தன்மைய; அகம் என்பது இல்லம்; பார்ப்பனமகளிர் தங்
கணவரை அகத்துக்காரர் என்று சொல்லும் வழக்கு இன்று
முளது; இல்லக்கிழத்தியினது சார்பினாற் றலைமகன் அறமுத
னான்கினையும் பெறும் ஒழுக்கத்தை அகத்திணை யெனவும், மாற்
றாசரும் பிறருஞ் சார்பாக நாற்பொருளையும் பெறும் ஒழுக்கத்
தைப் புறத்திணையெனவும் வைத்துத் தமிழ்மொழி மாந்தர் புல
னெறிவழக்கஞ் செய்தாரென்க. இங்ஙனம் பொருள் கொள்ளு
மிடத்து "அகத்திணை" "புறத்திணை" என்பவற்றை "Life at
Home", "Life abroad" எனப்பெயர்த்தெழுதலாகும். கண்
டுங் கேட்டும் உண்டு முயிர்த்து முற்று மறியுமின்ப மனைத்தும்
உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவவாதலால் வீரப்போரின்ப
மும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவது; அநுபவித்தார்க்
கன்றிப் பிறர்க்குப் புலனாகாதது; அங்ஙனமாதலின் அகம் என்ப
தனுக்கு உள்ளம் எனப் பொருள் கொள்ளுங்கால் வீரப்போ
ரின்பத்தையும் அகத்திணையெனக் கொளல்வேண்டுமே, ஆதலால்
அகம் என்பதற்கு இல்லமெனப் பொருள் கொண்டதே பொருத்த
மாமென்க. அஃதன்றியும் ஒண்டொடிமகளிர்பாற் பெறும் இன்ப
மாத்திரமே இன்பமெனச் சாதித்தலும் பொருந்தாது, புயவலி
படைத்த அடலரியேறனையானுக்குப் போர்க்களத்துப் பெறுமின்
பம் சொன்மடங்கு மென்மொழி மாதர்பாற் பெறுமின்பத்தினும்
பன்மடங்கு அதிகமாதலின், அருந்தமிழ்க் கவியைப்படிக்கும்

போது கவிஞர் கருத்தொடு நங்கருத்து ஒன்றுபட அநுபவிக்கு மின்பமும் "கருத்தொப்ப ஆதரவுபட்ட" வின்பமேயாகும்.

இனி நுண்மதித் தமிழ்மார்கள் வீட்டியல் கூறிய மாயினை யாராய்வாம். சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய வீடு இலக்கணவகையாற் கூறுந்தரத்தன்று. வீடு கூறிய ஏனைய மொழிமாந்தரும் அதனைக் காரணவகையாலும் எடுத்துக்காட்டு வகையாலும் கூறினரேயன்றிச் சொல்லுங்கடங்காப் பேரின்பத் தைச் சொல்லுங்கடக்க முயன்றாரல்லர். காரணவகையாற் கூறு மிடத்துப் பெருந்திணையானும் காஞ்சித்திணையானுங் கூறப்படும். பின் அநுபவ வகையாற் கூறமிடத்து அகத்திணை அன்புமார்க்க மாகும்; புறத்திணை அறிவுமார்க்கமாகும். இவற்றை வடநூலார் முறையே பக்திபோகம் ஞானயோகமென்பர். அநுஞுங் குரவனுங் கூட்டிவைக்கக் கண்ட காட்சியுங் கலந்த வுவகையுஞ் சம்பலையுங் கண்ணீரும் பிரிவாற்றுமையும் நீடுநினைந்திரங்கலும் அகனைந் திணைக்கேயுரியவாம். ஐம்புலக்கள்வர் ஆவினைத் தந்தோம்ப அவரையடர்த்தெதிர்த்து அஞ்சுதகச்சென்று அரணத்தை வளை த்து வெற்றியுந் துதியும் பெறுவது புறத்திணையொழுக்கமாம். "வேல்கெழு தடக்கைச் சால் பெருஞ்செல்வ"னுகிய தமிழ்ப் பெருங்குரவன் மறவொழுக்கத்தால் மாயை மக்கள் மூவரையுங் கடிந்து அன்பின் மேனதாகிய அறவொழுக்கத்தால் வள்ளிநாயகி யாரை மணந்து புறத்திணையகத்திணை யொழுக்கங்களை உல கிற்கு நன்குணர்த்திய வரலாற்று விரிவைத் தமிழ்மொழிக் கந்தபுராணத்திலும் தணிகைப் புராணத்திலுங் காணலாகும்.

இனித் திணைவகையை யாராய்வாம். அந்தணருமறைநூல் மன்றலெட்டு எனக்கூறிற்று. தமிழருமறையாகிய அன்பினைந் திணை கந்தருவ வழக்கத்தை யைந்தாகக் கூறிற்று. இருமொழி மரபையும் இயைய வைத்து நோக்குங்காற் பிரமம், பிரசாபத்தி யம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், அசுரம், இராக்கதம், பேய் எனப்பன்னிரண்டாம். இவற்றுட் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பெருந் திணை; நற்றிணின்ற மூன்றுங் கைக்கிளைத்திணை. "பாங்கனிமித்தம்

பன்னிரண்டெண்ப", "முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே" என்னும் பொருளதி
காரச் சூத்திரப் பொருளை நோக்குக. ஆகவே மன்றலெட்டு, நிமித்
தம் பன்னிரண்டு என்றவனையாவும் திணை எழு என அடங்குவ.
பெருந்திணை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், கைக்
கிளை ஆகிய அகனெழுதிணைக்கும் முறையே காஞ்சி, வெட்சி,
வாகை, வஞ்சி, தும்பை உழிஞை, பாடாண் என்பன புறனாகும்.
—குறுகு, பகு, முகிழ், நை, மறு(ந்), காய், கர(த்), நொ, வெ
குள், வகு, வன்பு, தன்பு, உரிஞ் என்னும்வினையடிகளோடு தல்,
அல், அம், ஐ, சி என்னுந் தொழிற்பெயர் விகுதிகளுள் ஏற்புடை
யன கூடிப்பிறந்த தொழிற்பெயர்களாமோ குறிஞ்சி, பாலை, முல்லை,
நெய்தல், மருதம், காஞ்சி கரந்தை, நொச்சி, வெட்சி, வாகை,
வஞ்சி, தும்பை, உழிஞை என்னுந் திணைப்பெயர்கள் என்னும்
முடிபு ஆராய்தற்குரியது. அஃதெங்ஙனமாயினும் பாலையும்
பாலைப்புறனாகியவாகையும் "பகு" "வகு" என்னும் அடிகளி
னின்று பிறந்தனவாமென்றல் பொருத்தமுடைத்து. ஆசிரியன்
பாலைக்கு நிலம் வகுத்தானல்லன், அஃதொழிந்த நான்கனுக்குமே
படுதிரை வையத்தைப் பகுத்துக்கொடுத்தனன், பாலை ஏனைய
நான்கனுள்ளுஞ் செறிந்து நிற்குமியல்பினதாதலின். இனி உயி
ரும் உடலும் மலரும் மணமும்போல ஒருமித்திருந்தாரிருவரை
அறமும் பொருளுங் காரணமாகப்பகுத்து நிறுத்து மியல்பினது
பாலைத்திணை. பாலைப்புறனாகிய வாகையினியல்பை நோக்குங்காற்
பிறப்பொத்து ஒன்றித்திருந்த மக்கட் கூட்டத்தினரைச் செய்தொ
ழில் வேற்றுமைச் சிறப்புநோக்கி அந்தணர் என்றும், அரசர் என்
றும், ஏனோர் என்றும், அறிவர் என்றும், தாபதர் என்றும், பொரு
நர் என்றும் வகுத்து நிறுத்தியது வாகைத்திணை. பாலையும்வாகை
யும் பெருகக்கூறும் பொருட்பகுதிகள் அறமும்பொருளுமேயாம்;
காஞ்சியும் பெருந்திணையுந் துறக்கங்கூறுஞ்சிறப்புடைய எனவுங்,
கைக்கிளையும் பாடாணும் ஒருதலையாய அன்பின்பால எனவும்
முன்னர்க்கூறினும். எஞ்சிய அகனான்கும் சிறப்புடையின்பப்
பொருளை, எடுத்துக்காட்டுவகையால் வீட்டியல் கூறுவ; அங்ஙனே
எஞ்சியபுறனான்கும் வீரப்போரின்பப் பொருளை, எடுத்துக்காட்டு
வகையால் வீட்டியல் கூறுவ.

மனமொழிமெய்களா லறியவொண்ணாத பேரின்பப்பொருளை யாண்டும் வெளிப்படையாகக் கூறுவது இயலாத தொன்றாகலின் ஆசிரியர் குறிப்பாகவுணர்த்தியது மரபாயிற்று. சொற்றொடர் கருவியாக வறிவது பொருள். சொல் பொருளை யுணர்த்தும்வழி வெளிப்படையாகவுங் குறிப்பாகவுமுணர்த்தும். அங்ஙனமுணர்த்தும் பொருளும் பலவேறுவகைப்பட்ட மாந்தர தமனநிலைக்கேற்பத் திரிபுபட்டுநிற்கும். அவரவர்கொண்ட பொருளே அவரவர்க்கு மெய்ப்பொருளாகும். உதாரணமாக இன்பமெனுஞ் சொற் கேட்டவிடத்துக் கட்குடியன் கள்ளுண்டு களியாடுமின்பத்தை நினைவுகூருகிறான். பரிசவின்பத்தின் பாலதாகிய இணைவிழைச்சியினது பொய்மையியல்பை யுணராதான் அவ்விணைவிழைச்சியை யின்பமென வெண்ணுகிறான்; அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். கண்ணுக்கினிய காட்சியையும் செவிக்கினிய இசையினையும் மூக்குக்கினிய நறுநாற்றத்தினையும் இன்பமென எண்ணுவோர்க்கு அவையே மெய்ப்பொருள். போர்க்களத்துச்சென்று பகைவரை யெறிந்தும் அவர் எறிந்த வேலை மார்பகத்துத் தாங்கியும் புறங்காட்டாது நிற்பதே இன்பமெனக்கொண்ட வீரனுக்கு அதுவேமெய்ப்பொருள். இல்லத்திருந்து குலமகளோடுகூடிக் கண்டுங்கேட்டும் உண்டும் உடுத்தும் உற்றும் உயிர்த்தும் அநுபவிப்பதே இன்பமெனக் கொண்டோனுக்கு அதுவே மெய்ப்பொருள். இனிப் பெண் என்பது "எற்புச்சட்டம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம் பைம்மறியாநோக்கப் பருந்தார்க்குந் தசைசமைத்து" என்றுஇவ்வாறுநினைத்து உலகைத்துறந்து கற்பகக்கா நிழலில் அரமகளிர் அடிவருட வீற்றிருப்பேனென நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். இறைவனது பொன்னடி நீழலடைந்து அழியாவின்பத்தைப் பெறுவேனென்று நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். அதுவும் வேண்டேன் இன்னுயிர்க்குயிராகிய இறைவனுக்குப்பணிசெய்தலை மேற்கொள்ளுவேன் யாதுவரினும் வருக என நினைப்பவனுக்குஅதுவே மெய்ப்பொருள். இங்ஙனே மாறுபட்ட பலவும் இன்பம் என்னும் ஒருமொழிக்கே பொருளாயினவாறுணர்க. "தானேயவள், அவளே தான்" என்னுந் தொடர்மொழி செவிப்படலும் இலக்கண வித்துவான் "அது தலைமகனுந் தலைமகளும் பொருவிறந்தா

ரென்பதையுணர்த்திற்று" என்பான். வேதநூல்வல்ல அந்தணன் முற்பட்டு "அன்று அன்று இச்சொற்றொடர் 'அது நீ ஆனாய்' என்னும் மகாவாக்கியப்பொருளைக் குறிப்பினால் உணர்த்துவது" என்பான். சைவநூல் வல்லான் முன்னிருவர் பொருளையும்மறுத்துப் "பொருவிறந்தாராவார் இறைவனும் இறைவியும், இம்மொழி அவரது நித்தியமாகிய அபேதத்தன்மையை உணர்த்திற்று" என்பான். தார்க்கிகன் இவரனைவரையும் மறுத்து "தான் எழுவாய் அவள் முடிபு, பின்னும் அவள் எழுவாய் தான் முடிபு, ஆதலால் இத்தொடர்மொழி இதரேதரம்" என்பான். உலோகாயதன் புன்னகை புரிந்து "ஐயன்மீர் இல்லதும் இனியதும் புணர்த்துரையன்மின் மரனும் வல்லியும் போலும் எள்ளும் அரிசியும் போலும் பாலும் நீரும்போலும் கலந்திருக்கும் நிலைமையைக் கூறிற்று இச்சொற்றொடர்" என்பான். இங்ஙனம் ஐந்திணைத் துறையனைத்தினுக்கும் பொருள்கொள்ளுதல் கூடுமாதலினாலன்றோ வாதவூரடிகளது ஐந்திணைக்கோவையை நோக்கி,

> "ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
> காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
> ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
> சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என ஆன்றோர் வியந்து கூறினர்.

பலதிறப்பட்ட மொழியினும் பரந்துபட்ட நூல் பலவும் அறம் பொருளின்பம் வீடென நாற்பாலுள் அடங்குவன. இவை தொகை விரியாகத் தமிழ்மொழியகத்துச் செறிந்து நிற்பன. தமிழ் மொழிக்கு நூலாவன சங்கச்சான்றோர் தொகுத்த நூல்களேயாம், ஏனைய நூல்களிவற்றின் வேறுபட்ட வல்லவாகலான்—இராமன் கதை, சீவகன் கதை, நளன் கதை என நிற்பனவற்றுள் "இராமன்", "சீவகன்", "நளன்" எனவருமிடங்களில் "தலைவன்" எனக்குறியீடு செய்தும், ஒழிந்தவற்றையும் அற்ற பெற்றி தலைவி, பாங்கன், பாங்கி, அடியோர், வினைவலர் என இவ்வாறு கொண்டும் நோக்குங்கால் பிற்காலத்து நூற்பொருள் முன்னோர் நூற்பொருளின் வேறுபடாது நிற்பது புலப்படும். இனிச் சங்கத்தமிழ் நூலனைத்துக்

தொல்காப்பியத்தினுள்ளடக்கம். தொல்காப்பியத்து எழுத்துஞ் சொல்லும் பொருளினுள் ளடங்குவன. பொருள் கூறும் ஒன்பது இயலும் அகத்திணையியல், புறத்திணையியல் என்னும் இரண்டனு ள்ளடங்குவன. புறம் அகத்தினுள்ளடக்கம். அகத்திணை பெருமானடிகளருளிச்செய்த "அன்பிணைந்திணை"யினுள் ளடக்கம். அன்பிணைந்திணை அன்பினு ளடக்கம். அன்பு ஆகாரவுயிரினுள்ளடக்கமென பேலோர் கூறுவர். இனித்தோற்றப் பொருளனைத்தும் முதல் கரு வுரியென அடங்குவன. கருப்பொருளும் உரிப்பொருளும் நிலம் பொழுது என்னும் முதற்பொருளினுளடங்குவன. இவை ஆதிபகவனாகிய முதலினையுடையன. "அகரமுதல வெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றே யுலகு" என்னும் பொய்யாமொழிக்குப் பொருள் கொள்ளுமிடத்து "எழுத்து" என்பது முதல் சார்பாகிய முப்பத்துமூன் றெழுத்தினையும், அவ்வெழுத்துக்களின் கூட்டத்தினாற் பிறந்த சொற்களையும், சொற்றொடர் கருவியாகிய பொருட் பகுதியனைத்தினையுங் குறிக்கும் ஆகவே, "எழுத்தெல்லாம்" என்பது "சொற்பிரபஞ்சம்." உலகு என்பது நிலம் பொழுது என்னும் முதற்பொருள்களாலாயது. நிலம் என்பது நிலத்துக்குக்காரணமான நீரையும், நீருக்குக்காரணமானதீயையும், தீக்குக்காரணமான வளியையும் வளிக்குக் காரணமான வானையுங்குறிக்கும். ஆதலின் "உலகு" என்பது "பொருட்பிரபஞ்சம்." சொல்லும் பொருளும் பேதா பேதமாய் நிற்பன. சொன் முதலாகிய அகரவுயிர் போலப் பொருண் முதலாகிய இறைவன் தானேயாய் நிற்பதனோடு யாண்டும் வியாபித்து யாவற்றினுஞ் செறிந்து நிற்பானென வுணர்த்தும் பொருண்மையது செந்நாப்போதாருரைத்த உத்தரவேத முதற்செய்யுள்.

இங்ஙனம் ஆராயுங்கால் ஒல்காப் பெருந்தவத் தொல்காப்பியனுரைத்த பொருணூலும், திருவள்ளுவப்பயனும், பொதுநூலாய்ப் பொருணன்கினையும் உணர்த்துபவாய் இம்மைமறுமைப் பயனை ஒருங்குதந்து நிற்பன என்பது புலப்படும். பெருமானடிகள் "என்னை பாவம், அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று அதுவும் ஞானத்திடைபதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என

அருள் சுரந்தளித்த "அன்பினைந்திணை"யும் வாதவூரடிக ளருளிச் செய்த இந்திணைக்கோவையும் சிறப்பு நூலாய அருமறை மொழியாய் வீட்டியலை விளக்கி நிலவுவன. இந்த நான்கு நூலும் "தமிழர் நான்மறை" யென ஆன்றோராற் போற்றப் படுவன. பொன்னும் மணியும் பொருளெனக்கருத நுண்மதித் தமிழ்மாந்தராற் பொருளெனக் காக்கப்படுவன விவையே. தமிழ் முதுகுடிப்பிறந்த திருவுடைப் பெருமக்களனைவரும் இவற்றைப் போற்றிப்படித்து இம்மை மறுமைப் பயனைப் பெறுவார்களாக.

தாய்மொழியை வளர்த்தல்.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந், வெ. சா. வேங்கடராமய்யரவர்கள் எழுதியது.)

(உ௩௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

வளர்த்தல்.

வளர்த்தல் என்றசொல்லோ இன்னும் வளரவேண்டிய தாழ்ந்த நிலைமையிலுள்ள ஒன்றனைக் குறித்துச் சொல்லப்படுவதாகும். இந்நிலையில், "நிலம் கடலாகவும், கடல் மலையாகவும், கண்ட பழமை வாய்ந்ததும், 'அயலாய் உள்ளவர்களுக்கும் பொருளை விளக்கக் கூடிய இயற்கை ஒலி'களைப்பெற்றிருப்பதும், வேறுபல சிறப்புக்களையுடையதும் ஆகிய நமதுமொழி, என் ஐயரே, தாழ்ந்த நிலைமையை அடைதல் வேண்டும்?" என்று ஒரு சிலர் அடியேனைக் குறிப்பாக வினவலாம். அங்ஙனம் வினவப்படின் அடியேன் அவர்க்கு "ஐயன்மீர், இத்தகைய பழமையும் மேன்மையும் வாய்ந்த ஒருமொழி தனது இயற்கையான உயர்ந்த நிலைமையிலிருந்து தற்பொழுது தாழ்ந்த நிலைமையிலிருப்பது வியப்பே! எனினும், அஃது உலகத்தியற்கை. அன்றியும், அது (நமது மொழி) சில நூற்றாண்டுகளாக—என், பல நூற்றாண்டுகள் என்றே சொல்லப்படலாம்—காலவேறுபாட்டாலும், அரசுமாற்றம் முதலிய பல மாறுபாடுகளாலும் இத்தகைய நிலைமைக்குவந்துளது. அதனால், அக்குறையை அடியேனால் நமது மொழியின்மேல் ஏற்றமுடியவில்லை. ஆனால், அஃது இத்துணைக்காலம் காப்பார் அற்று இருந்தும் இன்னும் உயிருள்ள, உலகவழக்கிலுள்ள, பேச்சுவழக்குமொழியாக இருப்பதே அதன் மிக உயரிய மேன்மையினை வலியுறுத்துவதாகும்" எனக்கூற முன்வருவேன். நிற்க, பிணத்துக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் எவரும் நமது பழையபெருமையைச் சொல்,

லிக்கொள்வதால் அன்னார்க்கு வரக்கூடிய நன்மை எதும் இன்று; அஃது அறிவுடையோரது பெருநகைப்புக்கே இடனாதும்; அன்றியும், அது, மடியாளர் செய்கையுமாம் ஆகலின், நாம் நமது மொழியை எங்ஙனம் வளர்த்தல் வேண்டும் என்பதை ஆராய்ந்து இனிது பயன் பெறும் வரையில் அத்துறையில் இடைவிடாது ஊக்கத்துடன் முயலவேண்டுவதே நமது முதற்கடமையாகும். அதுபற்றியே நாம் இன்று இங்கே கூடியிருக்கின்றோம். ஆகவே, இனி அடியேன் அதனைப்பற்றிக் கூறுவது பொருத்தமானது. ஒருவர் ஒன்றனை வளர்க்க முன்வந்தால் அன்னார் முதலில் அதன்கண்ணுள்ள குறைபாட்டைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். குறை—இன்றியமையாமை. இம்முறையில் அடியேன் அடுத்த படியாகக் கூறவேண்டியது நமது மொழியின் இன்றியமையாமைக்குத் தடையாக இருக்கும் குறைபாடுகளையே. அடியேன் முற்கூறியாங்குக் காலவேறுபாடு முதலியவற்றால் நமது தற்கால உலகவாழ்க்கைக்கு வேண்டுவன முன்னிலும் பலவாகப்பெருகிவிட்டன. அவை, 'இவை இவை' என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், அவற்றை அடைவதற்கும் துணைபுரிவனவாகப் பல கருத்துக்களையும் வழிகளையும் நாம் பிறமொழிகளிலுள்ள நூல்களால் அறிந்துகொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கின்றோம். நம்முடைய பண்டைச்சரிதங்களே இன்னும் நம்மால் வரன்முறையாக எழுதப்படவில்லை. இஃது ஒரு மறுக்கமுடியாத பெருங்குறையல்லவா? இங்கு எடுத்துக்காட்டாகத் "தமிழ் நாட்டுத் தெற்கெல்லையாகப் பண்டைச் சான்றோர் பலரும் குறித்துச் செல்லும் குமரிக்குத் தெற்கே நாற்பத்தொன்பது தமிழ் நாடுகள் இருந்தன என்று ஒருசாராரும், இருந்ததில்லையெனப் பிறிதொருசாராரும் கூறுவனவற்றையும்; முச்சங்கங்கள் இருந்தன என்று ஒருசாராரும், அங்ஙனமன்று சங்கம் ஒன்றே விட்டுவிட்டுத் தொடர்ந்து வந்தது என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; தமிழ்மொழிமாட்டுச் சிறப்பாகப் பயின்றுவரும் அகம், புறம் என்பன தனித் தமிழ் வழக்கேயன்றி ஆரியர் வழக்காகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பெரும் பேறுகளைப்பற்றிய வழக்கன்று என்று ஒரு சாராரும், அவ்வழக்குப் பற்றியவே என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; இங்ஙனமே, திருக்குறள் போன்ற நீதிநூற்கள் அகம், புறம் என்ற தமிழ் வழக்குப்பற்றி எழுந்தன என்று ஒரு சாராரும், அறம்,பொருள், இன்பம், வீடு என்ற ஆரியர் வழக்குப் பற்றி எழுந்தன என்று பிறிதொரு சாராரும் கூறுவனவற்றையும்; இவை போன்ற பிற பலவற்றையும் ஆராய்ந்து உண்மை காணவேண்டியது தண்டமிழ்ச்சரித வளர்ச்சிக்கு இன்றியமையாதன அல்லவா?" எனக்கூறலாம். சின்னாட்களாக ஆங்காங்குச் சிற்சில அறிஞர்கள் இத்துறையில் இறங்கி நாட்டிற்கும், மொழிக்கும் நன்மையைச் செய்து வருவது நம்மனோரால் பெரிதும் போற்றத்தக்கதே. எனினும், நமது சிறார்களும் உலகியல்களை நன்கு எளி

தில் உணர்ந்துகொள்ளத்தக்க வகையில் உலகநூல், உயிர்நூல், உடல்நூல், செல்வநூல், நிலநூல், ஒளிநூல், ஒலிநூல், வானநூல், அறிவுநூல் போன்ற பற்பல நூல்கள் பலப்பல மொழிகளினின்றும் நமது மொழியில் இன்னும் மொழிபெயர்க்கப்பட வேண்டாமா? வடமொழியிலுள்ள ‘சப்தகல்பத்ருமம்’ ‘வாசஸ்பதீயம்’ போன்றனவும், அங்கிலத்திலுள்ள ‘என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா’ ‘வெப்ஸ்டர்ஸ்’போன்றனவும் ஆகிய ஒருபேரகராதி நமதுதாய் மொழியாம் தண்டமிழ் மொழியில் இருக்கவேண்டியது இன்றியமையாத தொன்றல்லவா? அடியேன் இதே கருத்தைத் தற்காலம் நமது சென்னைச் சர்வகலாசாலையார் வெளியிட முயன்றுவரும் ‘தமிழகராதி’ யைப்பற்றிப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர்ப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளேன். தமிழ்மக்களது வரிப்பணத்தைக்கொண்டு ஓரிலக்கத்திற்கு மேற்பட்ட வெண் பொற்காசுகளைச் செலவிட்டு நமது சர்வகலாசாலையார் வெளியிடப்போகும் அப் பேரகராதி எவ்வளவு தூரம் தமிழ்மக்களுக்குப் பயன்படப்போகின்றது என்பது அது வெளிவந்தபின் பின்னர்த்தான் அறியலாகும்போலும்! ஆதலின், அடியேனும் அதைப்பற்றி ஏதும் இப்பொழுது கூறாது விடுகிறேன். அது, நம்மவர்க்கும், நமது மொழிக்கும் பெருந்துணை செய்யவேண்டும் என்பதே அடியேனது தாழ்மையான வேண்டுகோள். நிற்க அங்கிலம் போன்ற பிறமொழிகளில் அவ்வம் மொழியாளர்கள், தத்தம் மொழியில் வல்லுநராயிருந்த ஷேக்ஸ்பியர் (இவர் வங்கதேசத்தறிஞர்களில் ஒருவர் எனச் சிலரால் கருதப்படுகின்றனர்.) போன்ற மகாகவிகள் இயற்றிய நூல்களைப் புத்தகசாலைப் பதிப்பு என்றும், சாதாரணப்பதிப்பு என்றும் வெளியிட்டுப் பார்ப்போர்களுடைய கண்களைக் கவருமாறும், எவர்க்கும் எளிதிற் கிடைக்குமாறும் செய்கின்றார்களே. அத்தகைய நிலைமை நமது பண்டைச்சான்றோர்கள் இயற்றியருளிய தண்டமிழின் மேலாம் தரங்களாகிய பெறலரும் நூல்களுக்கு உண்டாதல் வேண்டாமா? உயர்ந்த கருத்துக்கள் நிறைந்தனவாய், எவரையும் எளிதில் அறிவுறுத்தத் தக்கனவாய், நாடோடியாகத் திரியும் பிச்சைக்காரர்களிடமே தங்கி உருமாறியிருப்பனவாய் உள்ள பல பாக்களும் பழமொழிகளும் தத்தம் முன்னை உருவங்களுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டாமா? அங்ஙனமே, இன்னும் நவநாகரிகம் தலைக்காட்டாத சிற்றூர்களிலுள்ள பெண்பாலர்களிடத்திலும் சிறுர்களிடத்திலும் தங்கியிருக்கின்ற தாலாட்டு, விளையாட்டு முதலியனபோன்ற பாடல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டாமா? விவசாயத்தைப்பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், வியாபாரத்தைப்பற்றியும் நமது மொழியில் எத்தனை நூல்கள் இருக்கின்றன? சிற்பம், கணிதம் போன்ற கலைகளிலே பெரிதும் கவனஞ்செலுத்த விரும்புவோருக்குத் துணைசெய்யத்தக்க நூல்கள் நமது மொழியில் இருக்கின்றனவா? அரசியலைப் பற்றியநூல்கள் போதிய அளவு நமது மொழிக்கு வேண்டு

வதின்று? இவற்றால் நமது மொழியை முன்னர்ப் புகழ்பவன்போற் காட்டிப் பின்னர்ப் பழிக்கவந்தவனாக அடியேனை நீங்கள் கருதிவிடலாகாது. முற்காட்டிய குறைகளைப் போக்கத்தக்கனவாக ஆங்காங்குச் சிற்சில நூல்கள் வெளிவந்தும், வந்துகொண்டும் இருப்பதை அடியேன் நன்றாய் அறிவேன். என்றாலும், அவை, நமது நாட்டின் பரப்பையும், நமது மொழியினைப் பேசுவோரது பெருக்கையும் நோக்கச் சிறிதும் போதாதன என்பதே அடியேனது கருத்து. இது பற்றித்தான் அடியேன் அவற்றைக் குறை எனக் கூறியதும். ஆயினும், இக்குறையையும் அடியேனால் நமது மொழிமாட்டு ஏற்றமுடியவில்லை. எங்ஙனமெனில், எந்த நாட்டிலும், எந்தக்காலத்திலும், எந்தமொழியிலும் காலத்திற்கேற்ற பலசிறப்பட்ட புதுப்புதுக்கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தாமாகவே தோன்றின என்று யாண்டும் கேட்கப்படவில்லை. அங்ஙனம் தோன்றவும் முடியாது. ஆனால், அவை, பல தக்க அறிஞர்களால் அவ்வப்பொழுது புதிது புதிதாக எழுதப்பெற்றே நாளடைவில் வளர்ந்து உயர்நிலையைப் பெற்றுவருகின்றன என்க. இவற்றால், நமதுமொழி பலதுறைகளிலும் வளர்க்கப்படவேண்டிய நிலைமையிலேயே இருக்கின்றது என்பதும், வளர்த்தல் இன்றியமையாததொன்றாம் என்பதும் பெறப்படுகின்றன.

வளர்த்தற்குரியவர்.

ஒரு மொழியை வளர்க்கவேண்டுமாயின், அதற்கு அம்மொழியாளராகிய அரசர் முதல்மக்கள் (பொதுஜனங்கள்) ஈறாகப் பலரும் அவர் அவர்களுடைய அறிவு ஆற்றல்களுக்குத் தக்கவாறு உண்மையாக உள்ளன்புடன் உறுதியோடு உழைக்க முன்வரல்வேண்டும். இம்முறையில் நமது தாய்மொழியோ அத்தகைய பெரும் பாக்கியத்தைத் தற்காலம்பெற்றிருப்பதாகத் தோன்றவில்லை. எங்ஙனமெனில், உள்ள ஓர் அரசரும் "ராஜீய கலவரங்களை முன்னிட்டும், சொந்த விஷயத்தை உத்தேசித்தும் நான் நிரந்தரமாக இந்தியாவிற்கு வெளியே வசிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்." எனத் தம்முடைய குடிமக்களுக்கு ஓர் அறிக்கையைச் செய்துவிட்டுத் தமது நாட்டில் இருந்து வாழ்வதையும் வெறுத்து வேற்று நாட்டிலேயே தங்கி வாழ்ந்துவருகிறார்; அவரது ஆட்சியோ அங்கிலமயமாகவே நடைபெறுகின்றது; அங்கே தமிழ்வாடை வீசுகின்றதோ என்பதும் ஐயுறவேண்டியிருக்கின்றது. அன்றியும், நாம் அந்தத் தமிழொரு வேந்தரால் பிரதிகாவலராக நியமிக்கப்பெற்ற நமது தமிழர் பெருமானால் நமது தாய்மொழியாம் தண்டமிழ்மொழியின் வளர்ச்சிக்கு எத்தகைய உதவி கிடைக்கப்போகின்றது என எதிர்நோக்கவேண்டிய நிலைமையிலுமிருக்கின்றோம். ஜமீந்தார்களோ வழக்கம்போலக் களியாட்டங்களிலும், பிற பலவேண்டாத விநோதங்களிலுமே பொழுது போக்குகின்றவர்களாய் இருக்கின்றார்கள்.

மடாதிபதிகளைப்பற்றியோ கூறவேண்டியதில்லை. அவர்கள், தாங்கள் எழுந்தருளி அலங்காரம் பண்ணும் மடங்கள் சமய வளர்ச்சிக்கும், மொழியின் வளர்ச்சிக்கும் என்றே நிலையிடப்பெற்றன என்பதை முற்றும் மறந்து நிற்கின்றார்கள். பொருளாளர்களோ எங்ஙனம் தங்களது பொருளை முன்னிலும் அதிகமாகப் பெருக்கிக்கொள்ளலாம் என்பதிலேயே கண்ணையும் கருத்தையும் செலுத்திவருகின்றார்கள். தர்மஸ்தாபனங்களோ பெரும்பாலும் பொருளாசை கொண்ட அப்பொருளாளர்களது மேற்பார்வையிலேயே இருந்து வருகின்றன. ஆதலின், அவற்றைப்பற்றியும் நாம் கவலைப்படுதல் பயன்தருவதாகாது. இவற்றால், அடியேன் முற்கூறியது தவறாகாதென்க. என்றாலும், நமது மொழியை வளர்த்தற்கு உரியவர் இல்லாமற்போகவில்லை. வேறு பலரும் இருக்கின்றனர்; பல ஸ்தாபனங்களும் இருக்கின்றன. அவைநாம் மக்கள், (பொது ஜனங்கள்) அவர்களுள் ஒருவகையினராகிய புலவர்கள், பெரும்பாலும் அவர்களாலேயே நடத்தப்படும் கழகங்கள், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள், துரைத்தனம் ஆதிய ஆகும்.

எங்ஙனம் வளர்த்தல்வேண்டும்?

இம்முறையில், எவர் எவர், எவை எவை, எப்படி எப்படி நமது மொழியை வளர்த்துவரல் வேண்டும் என்பதே இனிக் குறிப்பிடப்படல்வேண்டும்.

(அ) மக்கள்.

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் சற்றேறக்குறைய இருகோடியினர் ஆவார்கள் என்பது முன்னர்க்கூறப்பட்டது. இன்னணம் இருந்தும், நமதுமொழி வளரவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. என்செய்வது? இனியேனும், ‘அவர்கள்—பொதுவாக ஒவ்வொருவரும், சிறப்பாக உயர்தரப்படிப்பைப் படித்துப் பட்டம்பெற்றவர்களும்— தாம் தாம் தமது மொழியாளராகிய பிற உடன்பிறப்பாளருடன் பேசும்போதெல்லாம் தடுக்க முடியாத நிலைமை உண்டானாலன்றி எக்காரணம் கொண்டும் தாய்மொழியால் அன்றிப் பிறமொழிகளாற் பேசிக்கொள்ளுதல் கூடாது’ என்ற உறுதிப்பாடு உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்; இங்ஙு அன்னார் “அங்கிலப் பார்லிமெண்டு சபையிலே இந்தியா உதவி மந்திரியாராயிருந்த கனம் வின்டறப்பிரபு அவர்களும், இந்தியா மந்திரிசபையிலே ஓர் உறுப்பினராயிருக்கும் கனம் பூபேந்திரநாத வஸு அவர்களும் லண்டன்மா நகரத்திலும் தாங்கள் தனித்துப்பேசிக்கொள்வதாயின் அங்கில மொழியிற் பேசிக்கொள்ளாது தங்களது தாய்மொழியிலேதான் பேசிக்கொள்வார்கள்” என்று கேட்கப்படுவதை ஊன்றியறிதல் பொருத்தமானது. அன்றியும், அவர்கள், தமது தாய்மொழியை அறிந்தவர்களிடத்தில் அதை விடுத்துப் பிறமொழிகளாற் பேசுவதைப் பாவச்செயலாகவும் கருதல் வேண்டும்; மேலும், ஆண்டாண்டுள்ள மொழிப்பற்று

டியார் அனைவரும் முன்னர்த் தாங்கள் நடந்துகாட்டிப் பிறரையும் அங்ஙனமே நடந்துகொள்ளுமாறு திருத்திவரல்வேண்டும்; இச்சபையில் எனது தாய்மொழியாகிய தமிழிலே என்னால் பேசமுடியாமைக்கும், தெரியாமைக்கும் நான் வருந்துகின்றேன்" என்று அதனையும் வேற்றுமொழியாற் கூறுவதைப் பெருமையாக நினைப்பது தவறு என்பதையும், அது வெட்கமானது என்பதையும் உணரல் வேண்டும்; 'நாம் பிரசங்கமாரி பொழிந்து அறிவுறுத்த வேண்டியவர்கள் எந்தமொழியை இயல்பில் அறிந்திருக்கின்றார்களோ அந்தமொழியிலேயே பொழிந்தால்தான் அந்தப் பிரசங்கம் குறித்த பயனை அளிக்கும்' என்பதை அடியேன் அவர்க்கு வற்புறுத்திக் கூறவேண்டியதில்லை. இங்கு அவர், "முன்னர்த் தமது தாய்மொழி (வங்காளமொழி)யிலே செய்யுளை இயற்றி, அதைத்தான் பின்னர்த் தம்மால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முடியும்" என்று நமது (இந்தியக்) கவியரசர் ரவீந்திரநாததாகூர் கூறுவதன் உட்கருத்தை உற்று நோக்கற்பாலர். இன்னும், அன்னார், ஒரு நாடு ஒற்றுமையுற்று முன்னேறும் வண்ணம் துணைபுரிவதற்கு அந்த நாட்டு மொழியின் வளர்ச்சியே பெரிதும் இன்றியமையாததொன்றாம் என்பதனையும் தமது கருத்திற் பதிய வைத்துக்கோடல்வேண்டும். இதற்கு மேற்கோளாக "ஒருநாடு முன்னேற வேண்டுமாயின், உதிரம், உடல்முழுவதும் ஓடிப் பரவுதல்போல், அந்நாட்டுப் பெரியோர்களின் கருத்துக்கள், அந்நாட்டு மக்கட் பரப்பு முழுவதும் ஓடிப் பரவுதல் வேண்டும். ஆனால், அவை, அவர் அவர்களின் தாய்மொழித் துணையாலேதான் அங்ஙனம் ஓடிப்பரவ முடியும்" என்று டாக்டர் பி.ஜெ. மேதா அவர்கள் கூறுவது நம்மனோரால் ஊன்றி அறியத்தக்கதாம். இவற்றால், தமிழராவார் ஒவ்வொருவரும் 'தன்கையே தனக்கு உதவி, என்ற உறுதியுரையை உணர்ந்து தத்தம் உரை செல்லுமிடங்களிலெல்லாம் நமது மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பல துறைகளிலும் முயன்றுவரல் வேண்டும் என்பதும், 'அவர் செய்யவேண்டும், இவர் செய்யவேண்டும்,என்று வாய்ப்பேச்சுப் பேசிக்கொண்டு வாளா நாள் கழித்தல் கூடாது என்பதும் பெறப்படுகின்றன. இங்கே, தாய்மொழியை வளர்க்கவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால் "மத்திய ஐரோப்பாவிலும் கீழ் ஐரோப்பாவிலும் உள்ள யூதர்கள் தங்களுக்குள் ஒரே பாஷை உபயோகிக்கப்படவேண்டும் என்ற கருத்துடன் தாங்கள் பேசும் ஆபாச இட்டிஷ் பாஷையை ஒரு நாகரிக பாஷையாய்ச்செய்து அதில் உலகத்திலிருக்கும் உத்தமமான கிரந்தங்களை எல்லாம் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அவர்களாற்கூட அன்னிய பாஷையின் மூலமாய்த் தங்கள் மனோபாவங்களைத் திருப்திசெய்துகொள்ள முடியவில்லை. தவிர, அந்த ஜாதியில் படித்திருந்த சிலர், எல்லாஜனங்களும் அன்னிய பாஷையைக்கற்று அதன்மூலமாய் அறிவைப்பெறவேண்டுமென்று நினைக்கவில்லை. ஆகையால், அவர்கள், எல்லாராலும் ஆபாசபாஷை என்று

கூறப்பட்ட தங்களது தாய்ப்பாஷையை மிகவும் கஷ்டப்பட்டுச் சீர்ப்படுத்தி, சிரேஷ்டமான நூல்களையெல்லாம் அதில் மொழிபெயர்த்து அதைக் கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமான காரியம். இந்த ஒரு தலைமுறையிலேயே இந்தப்பாஷை மிகவும் உன்னத நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பாஷை வெப்ஸ்டர்ஸ் அகராதியில் 'யூதர்களால் உபயோகப்படுத்தப்படும் ஓர் ஆபாச கலப்படப்பாஷை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இந்தப் பாஷையானது இப்படித் தூஷிக்கப்பட்டால் ஐரோப்பாவில் இருக்கும் யூதர்களுக்குக் கோபம் உண்டாகும். இந்த யூதபண்டிதர்கள் ஒரு தலைமுறைக்குள் தங்களது ஆபாச பாஷையை உன்னத நிலைமைக்குக்கொண்டு வந்திருக்கும்பொழுது, நம்முடைய நாகரிகமடைந்த தேசபாஷைகளைச் சிறப்பிப்பது மிகவும் சுலபமான காரியம். தென்னாப்பிரிக்காவிலும் இதே மாதிரி நடந்திருக்கிறது" என்று மகாத்மா காந்தி அடிகளார் கூறியிருப்பது நம்மனோர்க்கு நமது மொழியை வளர்க்கத்தக்க போதிய ஊக்கத்தை அளிக்கும் என நம்புகிறேன்.

(ஆ) புலவர்கள்.

இத்திருக்கூட்டத்தார் நமது தமிழ்மொழியைப் பற்றிச் சிறப்பித்து 'இஃது ஓர் உயர்தனிச் செம்மொழியாம்; இதில் எல்லா வளங்களும் நிறைந்துள்ளன' என்று கூறிக்கொண்டு காலத்திற்கேற்றவாறு வேண்டும் பலவற்றைச் சேர்த்துக்கோடற்கு முட்டுக்கட்டைகளாக இருந்துவருதல் கூடாது. சொற்களைப் புதுவதாகப் படைத்துக்கொள்வதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் ஆணை தந்துள்ளார் என்பதை இவர்கள் அறிந்தே இருப்பார்கள் என்பது ஒருதலை. ஆதலின் அன்னார், நமது தண்டமிழை உலகவழக்கிலில்லாத சில உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பெருமைப்படுத்த முயலலாகாது. ஆனால், அன்னார், நமது தாய்மொழியாம் தண்டமிழை உலகவழக்கிலுள்ள, உயிர்த்திருக்கும் உயர்தனிச்செம்மொழி என்று கூறிச் சிறப்பிக்க முயலல்வேண்டும்.

(இ) கழகங்கள்.

இவை, ஆண்டிற்கொருமுறை கூட்டங்கூடிச் சில நூறுபொற்காசுகளைச் செலவுசெய்து ஆடம்பரத்துடன் பலர் ஒன்றுகூடிச் சிலர் சிலவற்றைப்பற்றிப் பேசிக் கலைவதாற் சிறிதும் பயன் விளைந்து விடாது. ஆனால், அவை அங்ஙனம் செய்வதையே தங்களது கடமையை நிறைவேற்றியதாகக் கருதிவிடாது, அதனினும் மேலாக மொழியின் வளர்ச்சிக்கெனப் பல துண்டுப் பிரசுரங்களை ஏராளமாய் வெளியிட்டு எவர்க்கும் இலவசத்தில் எளிதிற் கிட்டுமாறு செய்துவரல்; என்றும் நின்று நிலவக்கூடிய தநநிதியினையுடையதும், சமயப்பகுதி கல்விப்பகுதி செல்வப்பகுதி சரிதப்பகுதி உழவுப்பகுதி கைத்

தொழிற்பகுதி வியாபாரப்பகுதி அரசியற்பகுதி ஆகிய பலபகுதிகளையுடையதுமான சிலமாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகைகளைத் தக்க ஆராய்ச்சியாளர்களைக்கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரைநூல்களை வெளியிடல் ஆகியவற்றையும் மேற்போட்டுக்கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை, பொருள்வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றை மேற்போட்டுக் கொள்ளலாகாது. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டு மேற்போட்டுக் கொள்ளல்வேண்டும். இத்தகைய அரிய செயல்களை மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரும், சென்னைத் தமிழர் கல்விச் சங்கத்தாரும் மேற்போட்டுக்கொண்டு செய்ய முன்வரலாம். இம்முறையில் உழைக்கத்தக்க வேறுபல கழகங்களும் உள. நிற்க, அவை அங்ஙனம் செய்ய முன்வருதல் மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முந்துதல் வேண்டும். இங்ஙனம், பலர் படித்தறிந்துகொள்ள முன் வருவாராயின், அத்தகைய ஆராய்ச்சிநிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளிவருவதும் இயலாததொரு காரிய மன்று. தமிழ்மொழிமாட்டுப் பேரன்பு உண்டு என விருதுபேசிக்கொண்டு இருப்புக்கடலையைப் போலக் கடினமான நடையில் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறாக நடக்காமலும் இருக்க வேண்டும். சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும், அதன் இன்றியமையாமையையும் விரித்துக் கூறுவித்தும், ஆங்காங்குக் கிளைக் கழகங்களை நிலையிடுவித்தும் வளர்த்துவர முயலல்வேண்டும். நாம் பேசுவது இன்ன மொழி என்பதைக்கூட அறியாத பல தமிழ்மக்கள் இன்னும் நமது தமிழ்நாட்டில் பத்தாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதை அடியேன் தாழ்மையுடன் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

(ஈ) ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள்.

நமது தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நமது நாட்டில் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப்போக்கு வரத்துக்களையும், ஏனைய நடபடிக்கைகளையும் தமது தாய்மொழியிலேயே செய்து வரல்வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகார எல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதிய அளவுவைத்து நடத்திவருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கும் பொருள் முட்டுப்பாடு உண்டாகாமற் போதிய அளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். நிற்க, அத்தகைய பள்ளிக்கூடங்களை நிலையிட்டும் ஆதரித்தும் வருவதால் மாத்திரம் அவை தமது கடமையை நிறை

வேற்றியன ஆகா. போதிய அளவு பிரசாரவேலைசெய்து பொதுஜனங்களைப் படித்துப் பயன்பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ்மக்களிட மிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றை நடத்துவோர் அடையும் பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ் மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

(தொடரும்.)

சேரவாரும் செகத்தீரே.

(ஸ்ரீமாந், அரு. சோமசுந்தரச்செட்டியார் அவர்கள் எழுதியது.)

உலகெலாம் படைத்து அளித்து அழிக்கும் பரம கருணாநிதியாகிய எல்லாம் வல்ல இறைவனே பரந்த இப்பூவுலகிற்குத் தலைவன். இவ்வுலகிலுள்ள எல்லாவுயிர்களுக்கும், தாயும் தந்தையுமாக இருப்பவனும் அவ்விறைவனே. எல்லாவுயிர்களும் அவ்விறைவனுடைய மக்கள். எல்லாவுயிர்களும் ஒருவர்க்கொருவர் உடன் பிறந்தோர் ஆவர். இறைவன் தம்மக்கள் எல்லோரும் இன்பமயமாக வாழ்வதையே விரும்புகின்றார். எல்லாவுயிர்களையும் சமமாகவே பாவிக்கின்றார். ஆதலால் நாம் எல்லோரும் நமது தந்தையார் விருப்பப்படி ஒற்றுமையாக—இன்பமாக வாழ்தல் வேண்டும். ஈண்டு, "நாம்" என்பது மக்கள் மட்டும் அன்று; மக்கள், மாக்கள் எல்லோரையுமே. அண்ணன் தம்பிகளாகிய நாம், ஒருவர்க்கொருவர் வேற்றுமைகொண்டு ஒருவரையொருவர் அடித்தல் வதைத்தல் உண்டல் முதலியன கூடா. ஒருவர்க்கொருவர் அன்பாய் இருத்தல் வேண்டும். இதுவே பொதுதர்மம்—உலகநீதி. இவ் வுலகநீதி எவ்வளவு உரம் பெற்றிருக்கிறதோ, அவ்வளவு காலந்தான், உலகமுழுவதும் சமாதானமாக—இன்பமயமாக இருக்கும். இது அருக அருக, உலகசமாதானமும் இன்பமும் குறையும். இப்பொழுது நம்முடைய நாட்டில் இந்த தர்மம், அருகிக் கொண்டேவருகிறது. இதற்கு மாறாக ஆயிரக்கணக்கான தீச்செயல்கள் புரியப்பெறுகின்றன. மக்கள், மாக்

தொழிற்பகுதி வியாபாரப்பகுதி அரசியற்பகுதி ஆகிய பலபகுதிகளையுடையதுமான சிலமாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகைகளைத் தக்க ஆராய்ச்சியாளர்களைக்கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரைநூல்களை வெளியிடல் ஆகியவற்றையும் மேற் போட்டுக்கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை, பொருள்வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றை மேற்போட்டுக் கொள்ளலாகாது. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டு மேற்போட்டுக் கொள்ளல்வேண்டும். இத்தகைய அரிய செயல்களை மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரும், சென்னைத் தமிழர் கல்விச் சங்கத்தாரும் மேற்போட்டுக்கொண்டு செய்ய முன்வரலாம். இம்முறையில் உழைக்கத்தக்க வேறுபல கழகங்களும் உள. நிற்க, அவை அங்ஙனம் செய்ய முன்வருதல் மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முந்துதல் வேண்டும். இங்ஙனம், பலர் படித்தறிந்துகொள்ள முன் வருவராயின், அத்தகைய ஆராய்ச்சிநிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளிவருவதும் இயலாததொரு காரிய மன்று. தமிழ்மொழிமாட்டுப் பேரன்பு உண்டு என விருதுபேசிக்கொண்டு இருப்புக் கடலையைப் போலக் கடினமான நடையில் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறாக நடக்காமலும் இருக்க வேண்டும். சுற்றுப்பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும், அதன் இன்றியமையாமையையும் விரித்துக் கூறுவித்தும், ஆங்காங்குக் கிளைக் கழகங்களை நிலையிடுவித்தும் வளர்த்துவர முயலல்வேண்டும். நாம் பேசுவது இன்ன மொழி என்பதைக்கூட அறியாத பல தமிழ்மக்கள் இன்னும் நமது தமிழ் நாட்டில் பத்தாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதை அடியேன் தாழ்மையுடன் அவற்றை நடத்துவோர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

(ச) ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள்.

நமது தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நமது நாட்டில் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப்போக்கு வரத்துக்களையும், ஏனைய நடபடிக்கைகளையும் தமது தாய்மொழியிலேயே செய்து வரல்வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகார எல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதிய அளவுவைத்து நடத்திவருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கும் பொருள் முட்டுப்பாடு உண்டாகாமற் போதிய அளவு பொருளுதவிசெய்தும் வரல்வேண்டும். நிற்க, அத்தகைய பள்ளிக்கூடங்களை நிலையிட்டும் ஆதரித்தும் வருவதால் மாத்திரம் அவை தமது கடமையை நிறை

வேற்றியன ஆகா. போதிய அளவு பிரசாரவேலைசெய்து பொதுஜனங்களைப் படித்துப் பயன்பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ்மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றை நடத்துவோர் அடையும் பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ் மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

(தொடரும்.)

சேரவாரும் செகத்தீரே.

(ஸ்ரீமாந், அரு. சோமசுந்தரச்செட்டியார் அவர்கள் எழுதியது.)

உலகெலாம் படைத்து அளித்து அழிக்கும் பரம கருணாநிதியாகிய எல்லாம் வல்ல இறைவனே பரந்த இப்பூவுலகிற்குத் தலைவன். இவ்வுலகிலுள்ள எல்லாவுயிர்களுக்கும், தாயும் தந்தையுமாக இருப்பவனும் அவ்விறைவனே. எல்லாவுயிர்களும் அவ்விறைவனுடைய மக்கள். எல்லாவுயிர்களும் ஒருவர்க்கொருவர் உடன் பிறந்தோர் ஆவர். இறைவன் தம்மக்கள் எல்லோரும் இன்பமயமாக வாழ்வதையே விரும்புகின்றார். எல்லாவுயிர்களையும் சமமாகவே பாவிக்கின்றார். ஆதலால் நாம் எல்லோரும் நமது தந்தையார் விருப்பப்படி ஒற்றுமையாக—இன்பமாக வாழ்தல் வேண்டும். ஈண்டு, "நாம்" என்பது மக்கள் மட்டும் அன்று; மக்கள், மாக்கள் எல்லோரையுமே. அண்ணன் தம்பிகளாகிய நாம், ஒருவர்க்கொருவர் வேற்றுமைகொண்டு ஒருவரையொருவர் அடித்தல் வதைத்தல் உண்டல் முதலியன கூடா. ஒருவர்க்கொருவர் அன்பாய் இருத்தல் வேண்டும். இதுவே பொதுதர்மம்—உலகநீதி. இவ் வுலகநீதி எவ்வளவு உரம் பெற்றிருக்கிறதோ, அவ்வளவு காலந்தான், உலகமுழுவதும் சமாதானமாக—இன்பமயமாக இருக்கும். இது அருக அருக, உலகசமாதானமும் இன்பமும் குறையும். இப்பொழுது நம்முடைய நாட்டில் இந்த தர்மம், அருகிக் கொண்டேவருகிறது. இதற்கு மாறாக ஆயிரக்கணக்கான தீச்செயல்கள் புரியப்பெறுகின்றன. மக்கள், மாக்

களை—ஆடு கோழி முதலிய உயிர்ப்பிராணிகளை எவ்வெவ்வகையில் துன்புறுத்தலாமோ, அவ்வவ்வகையில் எல்லாம் துன்புறுத்தி வருகின்றார்கள். தந்தம் ஊன—உடலைப் பெருக்கிக்கொள்ளும் பொருட்டுப், பிற உயிர்களின் ஊனை விரும்பி, அவைகளைக் கொன்று, அவைகளின் சட்டையைக் கழற்றி, வெள்ளைத்தோலை உரித்து, உடலைச் சந்து சந்தாகச் சிதைத்து உண்கின்றார்கள். மாக்கள் குலத்தை வேரோடு நாரோடு அறுத்து விடுவது எனக் கங்கணங் கட்டிக்கொண்டார் போல், அவைகளில் பெரியவை சிறியவை, ஆடவர் பெண்டிர், சூல்கொண்டுள்ளவை, குஞ்சு குட்டிகள் முட்டை முதலிய யாவற்றையும் சிதைத்து, இறைவன் படைப்பில் ஒரு பாகத்தைத் துடைக்கப் பார்க்கிறார்கள். அவர்களுடைய கண்களாகிய கண்ணிகளிலே—வலைகளிலே அகப்பட்ட மாக்கள், மீண்டும் அவர்களுடைய குடலப்பதேவர் திருவடிநீழலை யடைந்து இரண்டறக் கலக்கலாமே யொழிய, தத்தம் உறைவிடங்களுக்குச் செல்ல முடியாது. இதனால் மக்களாகிய நம்மைக்கண்டு, மாக்கள் எல்லாம் மலைக்கின்றன! ஆடு கோழிகள் எல்லாம் அலறுகின்றன! குயில்கள் எல்லாம் குடர்நடுங்குகின்றன! பறவைகள் எல்லாம் பறந்து ஓடுகின்றன! காடை கதுவாலிகள் எல்லாம் கதறுகின்றன! மான் மரைகள் எல்லாம் மறுதுகின்றன! முயல்கள் எல்லாம் ஓடிப் புதர்களிலே பதுங்குகின்றன! மாடுகள் எல்லாம் ஆடுகின்றன! எருமைகள் எல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுகின்றன! பன்றிகள் கூடப் பதறுகின்றன! நண்டுகளும் நம்மைக்கண்டு நடு நடுங்குகின்றன! பாம்பைக் கண்டு பதறி ஓடும் தவளைகளைப்போல், எலிகள் எல்லாம் பயந்து ஓடி, வளைகளில் ஒளிகின்றன! அணிற் பிள்ளைகள் எல்லாம் கணில் நீர் பெருக்குகின்றன! மீன்கள் எல்லாம் துடிக்கின்றன! உடும்புகள் எல்லாம் உள்ளம் கொதிப்புறுகின்றன! வாத்துக்கள் எல்லாம் மனம் வாடுகின்றன! மாடப்புறாக்களெல்லாம் மனம் சாம்புகின்றன! சின்னஞ்சிறு சிட்டுக் குருவிகளெல்லாம் சிந்தையழிகின்றன! அவைகளுடைய கண்களுக்கு, மக்கள் புலிகளாகவும் கரடிகளாகவும் காணப்பெறுகிறார்கள்! அவைகள், கையிலேவாள் தாங்கிய—கோல்தாங்கிய—துப்பாக்கி கொண்டுள்ள மக்களைக் கண்டால், இயமதூதர்களைக் கண்டது போல் கவலுறுகின்றன! ஏன்? மக்கள் அவைகளை

அடித்து அவித்துந் தங்கள் வயிற்றில்—சோற்றுந் துருத்தியில் வைத்து அடைத்துப் பாக்கியம் பண்ணப் பார்ப்பதினாற்றான். அந்தோ! மக்கள் உண்ணும் உணவிற்காக, ஒவ்வொரு நாளும் எத்தனை லக்ஷம் ஆடு கோழிகள் அறுக்கப் பெறுகின்றன! ஒவ்வொரு ஊரிலும் எத்தனை கொலைக் களங்கள், எத்தனை இறைச்சிக் கடைகள், எத்தனை மில்டேரிகிளப்புகள், எத்தனை நவநாகரிகஹோடல்கள், சம்பெனிகள், எத்தனை வகைவகையான பதார்த்தங்கள், எத்தனை விதவிதமான கொலைக்கருவிகள் காணப்பெற்றிருக்கின்றன! ஆ!! அநியாயமாக எத்தனை ஆடு கோழிகள், சிறு தெய்வங்களின் முன்னரே நிறுத்தப்பெற்று, இரத்த வெள்ளம் பெருகி ஓடுமாறு, குற்றமேதுஞ் செய்தனபோல், கொற கொற வென்று கழுத்தறுக்கப்பெறுகின்றன! இதற்கு எத்தனை அரிவாள்கள்! எத்தனை பூசாரிகள்! எத்தனை சாமியாடிகள்! எத்தனை கோயில்கள்! எத்தனைகுட்டி வெட்டுப் பொங்கல்கள்! எத்தனை உயிர்க்கொலைகள்! என்னே! இதுவோ தர்மம்? இதுவோ நீதி? இதுவோ சிபிச்சக்ரவர்த்தி செங்கோலோச்சிய செல்வநாடு? இதுவோ மநுநீதிகண்ட மாச்சோழன் மாண்பு மிக்க மாணிக்கப்பொன்னாடு? இதுவோ கொல்லையின் முல்லைக்கு, எல்லையில் நல்லருள் சுரந்து தந்தேரினை ஈந்தும், மயிலுக்குப் போர்வை கொடுத்தும் மாநிலம்புரந்து மாண்புமிக்க புலவர் திலகர்களாற் பாடப்பெற்ற பாரிவள்ளல் பிறந்தநாடு? இதுவோ புத்தர்பிரான் அருள் பொங்கிய நாடு? அந்தோ! இதுவோ புலியும் பசுவும் ஒன்றாக ஒரு துறையில் நீர்பருகியநாடு? இதுவோ புலி முலை புல்வாய்க்கருளின திருவிளையாடல் நிகழ்ந்த இடம்? ஆஹா! எவ்வளவு உயிர்க்கொலைகள் நிகழ்கின்றன? என்ன அநியாயம்? இதனை இறைவன் பொறுப்பரோ? வெறுப்பரோ? தம்மக்களாகிய மக்கள் வாழவும், மாக்கள் சாழவும் விரும்புவரோ? நமது உடன்பிறந்தவர்களாகிய—அண்ணன் தம்பிகளாகிய அவ்வுயிர்ப் பிராணிகளை இவ்வாறு அறுக்கலாமா? நம்மை இறைவன் நன்றாக ஒறுக்கமாட்டாரா? அன்பு உடையவர்கள், அருள் உடையவர்கள், இரக்கம் உள்ளவர்கள் இதனைப் பார்த்துக்கொண்டு வாளா காலங்கழிக்கலாமா? இன்னும் உங்களுக்கு, வாயிலாத அவ்வேழைப் பிராணிகளிடத்தில் கருணை வரவில்லையா? இப்பொழுதே

ஒரு சில குட்டிவெட்டுப் பொங்கல்கள் ஆரம்பித்துவிட்டன! ஆயிரக்கணக்கான ஆடுகோழிகள் அவதிப்படுகின்றன! அலறுகின்றன! பதறுகின்றன! கதறுகின்றன! உங்கள் காதுக்குக்கேட்கவில்லையா? உங்கள் மனம் பொங்கவில்லையா? இனிமேல் வருகிற ஆனி ஆடிமாதம் வரையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மூலையிலும் இப்பொங்கல்கள் பொங்கிக்கொண்டேயிருக்கும். ஆடுகோழிகள் எல்லாம் அழுதுகொண்டேயிருக்கும். இரக்கமில்லாத ஏழை மக்கள் எல்லோரும், அவைகளை அறுத்து அவித்து வயிற்றில் அடைக்கப்பதறிக் கொண்டேயிருப்பார்கள். அதற்குப் பழைய பாத்திரங்களையும், சூரிக்கத்திகளையும், பச்சைக்கறியைச் சோத்துக் காயப்போடக் கொச்சைக் கயிறுகளையும் பழுதுபார்த்துக்கொண்டே யிருப்பார்கள். எங்குபார்த்தாலும் வாயிலாத ஏழைப்பிராணிகளின் அபயக்குரலாகவே யிருக்கும். அம்மா வெனுஞ் சப்தம் அகல் விசும்பெலாம் குடிகொள்ளும். இந்த அக்ரமமானது எல்லா இடங்களிலுமே நிகழுகின்றது. இத்தீச்செயலை எல்லோரும் புரிகின்றார்கள். இக்கொடுமையைத் தடுக்க வேண்டுவது அறிஞர் கடனாகும். எல்லா அறிவுநூல்களும், "எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாமையே—ஜீவகாருண்யதர்மமே சிறந்தது." எனச் சாற்றுகின்றன.

இத்திற னருள்கைப் பற்றி
யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய மிரக்க மின்றேல்
முத்தியைச் சார்கி லார்சற்
பத்தியா லியோகஞ் சாரும்
யோகத்தாற் பரம ஞானம்
சித்தியா மிதற்கா தாரஞ்
சீவகா ருணிய மன்றே.

இவ் வறநெறி எம்மதத்திற்கும் சம்மதமானது. இந்நெறியை அடிப்படையாகக் கொண்டவைகளே மதங்களாகும். மற்றவைகள் எல்லாம் மதங்களை அதஞ்செய்வனவேயாம். ஆதலால் அறிஞர்கள் அன்பர்கள் எல்லோரும், அஹிம்சாதர்மத்தை—அறநெறியை அடிப்படையாகக்கொண்ட எல்லாச் சமயத்தவர்களும், இந்த அன்பு நெறியை—இன்பநெறியை—வேத

நெறியை வளர்க்க முன்வருதல்வேண்டும். எல்லோரும் இதற்குத் தங்கள் தங்களால் இயன்ற உதவிகளைப்புரிதல்வேண்டும். வாளா சோம்பேறித்தனமாகப் பழங்கதைகள் பேசிக்கொண்டு, வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு திண்ணை தூங்கிகளாகக் கிடத்தல் கூடாது! ஏனெனில் இதனை நாம் தடுக்காது வாளா இருப்போமானால் இவ்வக்கிரமம் தலைவிரிகோலமாய் ஆட ஆரம்பித்து விடும். மக்களை மக்களே அடித்து அவித்துத்தின்னவும், நரபலியிடவும் ஆரம்பித்து விடுவார்கள். அக்காலத்தை உலக அழிவு காலம் என்று சொல்லலாம். இவைகள் எல்லாம் பொழுதுபோக்கான வாசகங்களன்று. இதை நீங்கள் சாதாரணமாக எண்ணவேண்டாம். இம் மறநெறிமட்டும் ஓங்கிக் கொண்டே செல்லுமானால் உலக அழிவு வருவது நிச்சயம்! ஆதலால் நாம் எல்லோரும் மிகமிகச் சாக்ரதையாக இருத்தல் வேண்டும். இம்மறநெறியை அறவே ஒழித்து விடுதல் வேண்டும். இதுதான் நமது முதற் பெருங்கடமையாகும். தற்காலத்தில் எல்லாச் சமயத்தவர்க்கும் எல்லா நாட்டவர்க்கும் வேண்டும்பணி இஃது ஒன்றுதான். செகத்தீரே! இதற்குச் செவிசாய்மின்! சிந்தனை செய்மின்! சேரவாரும் செகத்தீரே! பாங்குடன் பணிசெய்மின்! பரிவுகொண்மின்! அன்பர்களே! ஒவ்வொருவரும் உங்களால் இயன்ற உதவிகளைப்புரியுங்கள்! ஒவ்வொருவரும் ஒருபத்து உயிர்களையாவது காப்பாற்ற முயலுங்கள்! முயற்சி பயன்தரும். இது பொய்யாமொழி.

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
மாண்டிடு மேழை மக்களைப் பேணீர்!
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெ ருந்தொழில் நாட்டுவம் வாரீர்!

மக்களே! மாக்களைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!! செல்வத்திற்சிறந்த சீமான்களே! சிவகாருண்ய சீலர்களே! உங்களுடைய செல்வத்தை நல்குங்கள்! உழைப்பாளர்களே! உழைக்க வாருங்கள்! சொற்பெருக்கிடவல்லார் சொற்பெருக்கிடவாருங்கள்!

பண்டிதர்களே! பாக்கள்பாடித் நாநங்கள்! பத்திராதிபர்களே! "எத்திசையினும் எப்பொழுதும் கொலை தீது." எனப்பகருமின்! உங்கள் பத்திரிகைகளின் வாயிலாகக் கருணைநெறியைப் பரப்ப முயலுங்கள்! பட்டதாரிகளே! ஆடு கோழி வெட்டுதல் கூடாதெனச் சட்டஞ் செய்யுங்கள்! சுதேச மன்னர்களே! உங்களுடைய பாதுகாப்பிற்குட்பட்ட எல்லையில், "ஒருயிராவது கொலை செய்யப் பெறுதல் கூடாது" எனக்கூறுங்கள். "ஓறிவுயிர்க்கும் உறுதுயர் ஓம்புதல்" உங்கள் கடமை என்பதை உணருங்கள்! மாதர்களே! மாக்களை வதைத்து வைத்து அடைத்தாற்றான் மக்கள் பெருத்து விடுவார்கள் எனும் பேதமையை நீக்குங்கள்! செல்வாக்குள்ளவர்களே! உங்கள் வாக்கை உதவுங்கள்! இளைஞர்களே! உங்கள் இளமையின் திறத்தையும் ஊக்கத்தையும் இந்நன்னெறியில் பயன்படுத்துங்கள்! வயோதிகர்களே! உங்கள் பழமை வழக்கம் எனும் பாழ்மொழிகளை மொழியாது, இவ்வழிக்குத்துணை செய்யுங்கள்! எல்லாவுயிர்களும் இனிதுவாழ்ந்தப்ப, என்றும் இன்பம் பெருக, எங்கும் அன்புநெறியைப்பரப்பச் சேரவாரும் செகத்தீரே.

உலகெலாம் பெற்ற வன்னை யுத்தமி வாழ்கக் கந்தன்
வலமிகு கணேசன் வாழ்க! மன்றுபல் கலைகள் வாழ்க!
நலமிகு தருமம் வாழ்க! நல்லடி யார்கள் வாழ்க!
நிலமிசை ஆடு கோழி நித்தமும் வாழ்க மாதோ!

ஜர்மன் மார்க் நிலைமை.

அயல் நாட்டு நாணயங்களை ஜனங்கள் வாங்குவது வேடிக்கைக்காக அல்ல; மற்று, வஸ்துக்கள் வாங்கவும் கடனிறுக்கவும், சுருங்கச்சொன்னால், அந்த நாணயங்களை அவ்வந்நிய நாடுகளிலேயே செய்யவேண்டிய செலவுகளைச் செய்வதற்காகவுந்தான். ஆகவே, அந்நாணயங்களை வாங்குவது அதிகப்படுகின்றதென்பது, அவ்வந்நிய நாடுகளில் நடக்கும் வியாபாரவகைகளின் வரவு அதிகப்படுகின்றதென்பதாகும். தேசத்தில் உள்ள நாணயத்தின் அதிக இருப்பு காணப்படுமாயின், அத்தேசத்திலிருந்து வாங்குமளவு குறைந்திருக்கிறது என்பது போதரும். அன்றியும், காகித

நாணயங்களை அளவுக்குமிஞ்சி உற்பத்திசெய்து கொண்டிருந்தால் அது அதன் விலையில் குறைந்து படுமென்பதும் உறுதியாகும். ககூகச-ஆகஸ்டிலிருந்து இந்த அநுபவம் அநேக தேசங்கட்கு வந்திருக்கக்காண்கிறோம்; அவற்றிலும் ருஷியா ஆஸ்டிரியா ஜர்மனிதேசங்களே இவ்வநுபவத்தை மிகுதியாகப் பெற்றிருக்கின்றன. தனக்கு நேர்ந்த அதிகமான யுத்தச்செலவை, ஜர்மனிதேசமானது, காகித நாணயங்களை அளவுக்குமிஞ்சி யடித்து வந்ததனாலேயே பொறுத்துக்கொள்ளும்படியாயிருந்தது. பரிகாரக்கடன் தொகையின் பாதையினாலே, ஜர்மனியானது, யுத்தம் நின்று சமாதானம் ஏற்பட்ட பின்னருங்கூட, இத்தொழிலை நிறுத்திக்கொள்ள முடியாதிருந்தது. இத்தொழிலே, ஜர்மன்மார்க்கின் விலைக்குறைவை மேன்மேலும்தந்தது. யுத்தத்துக்குமுன் பவுனுக்கு உ0-மார்க்காக விருந்த தன்மையிலிருந்து கடந்து, சிலகாலத்துக்குப் பவுனுக்கு உ00, ரு00, மார்க் விலையாகவுமிருந்தது. பிறகு சுOO, எOO, விலையிலும் இறங்கியது; ககூஉஉ-முற்பகுதியில் கOOO-விலையையுங்கடந்து ஏற்றமும் இறக்கமுமாகச் சிலகாலமிருந்தது. ஒரு ஷில்லிங்குக்கும் குறைந்த விலையில் ஆயிரமார்க் இருக்குமென்று சொல்லக்கூடிய அளவுக்கும் வந்து கொடுக்கல் வாங்கல் உலகத்தைப்பிரமிக்கவும் செய்துவிட்டது. ஆகையால், "அதனது நாணயமாற்று இவ்வளவு தாழ்வில் விழக்காரணமென்ன? மார்க்கின் விலையைக் குறைப்பது ஜர்மனியின் எச்சரிக்கைத்தன்மையா? அப்படியானல், ஏன்?" என்னும் விஷயத்தையறிந்துகொள்ள நாம் முயலவேண்டும்.

ஜனங்கள் பொதுவாக அந்நிய நாணயங்களை வாங்குவது அதனைச்செலவிடத்தானென்றும், அக்காரணத்தினாலேயே அவ்வந்நிய நாணயங்களின் வாங்கும் விலைபேற்றமானது, அதிமுக்யமா யேற்பட்டு விடுகிறதென்றும் நாம் முன்னமே சொன்னோம். ஒரு தேசத்து நாணயத்தின் விலைமதிப்பானது, அத்தேசத்தினரால் வாங்கப்படக்கூடிய ஆகாரம் உடுப்பு வாடகை வண்டிச்சத்தம் வக்கில் கட்டணம் வைத்தியக்கட்டணம் ஆதியவற்றின் மலிவு கிராக்கிகளையே பொறுத்திருக்கின்றது; ஆனல், அதேநாணயத்திற்கு அந்நிய நாட்டினரால் ஏற்படும் விலைமதிப்பானது, அந்நிய நாட்டினர் அந்

பண்டிதர்களே! பாக்கள்பாடுந்நாவலர்காள்! பத்திராதிபர்களே! "எத்திசையிலும் எப்பொழுதும் கொலை தீது." எனப்பகருமின்! உங்கள் பத்திரிகைகளின் வாயிலாகக் கருணைநெறியைப் பரப்ப முயலுங்கள்! பட்டதாரிகளே! ஆடு கோழி வெட்டுதல் கூடாதெனச் சட்டஞ் செய்யுங்கள்! சுதேச மன்னர்களே! உங்களுடைய பாதுகாப்பிற்குட்பட்ட எல்லையில், "ஒருயிராவது கொலை செய்யப்பெறுதல் கூடாது" எனக்கூறுங்கள். "ஓரறிவுயிர்க்கும் உறுதுயர் ஓம்புதல்" உங்கள் கடமை என்பதை உணருங்கள்! மாதர்களே! மாக்களை வதைத்து வைத்து அடைந்தாற்றான் மக்கள் பெருத்துவிடுவார்கள் எனும் பேதைமையை நீக்குங்கள்! செல்வாக்குள்ளவர்களே! உங்கள் வாக்கை உதவுங்கள்! இளைஞர்களே! உங்கள் இளமையின் திறத்தையும் ஊக்கத்தையும் இந்நன்னெறியில் பயன்படுத்துங்கள்! வயோதிகர்களே! உங்கள் பழமை வழக்கம் எனும் பாழ்மொழிகளை மொழியாது, இவ்வழிக்குத்துணை செய்யுங்கள்! எல்லாவுயிர்களும் இனிதுவாழ்ந்துய்ப்ப, என்றும் இன்பம் பெருக, எங்கும் அன்புநெறியைப்பரப்பச் சேரவாரும் செகத்தீரே.

உலகெலாம் பெற்ற வன்னை யுத்தமி வாழ்கக் கந்தன்
வலமிகு கணேசன் வாழ்க! மன்றுபல் கலைகள் வாழ்க!
நலமிகு தருமம் வாழ்க! நல்லடி யார்கள் வாழ்க!
நிலமிசை ஆடு கோழி நித்தமும் வாழ்க மாதோ!

ஜர்மன் மார்க் நிலைமை.

அயல் நாட்டு நாணயங்களை ஜனங்கள் வாங்குவது வேடிக்கைக்காக அல்ல; மற்று, வஸ்துக்கள் வாங்கவும் கடனிறுக்கவும், சுருங்கச்சொன்னால், அந்த நாணயங்களை அவ்வந்நிய நாடுகளிலேயே செய்யவேண்டிய செலவுகளைச் செய்வதற்காகவுந்தான். ஆகவே, அந்நாணயங்களை வாங்குவது அதிகப்படுகின்றதென்பது, அவ்வந்நிய நாடுகளில் நடக்கும் வியாபாரவகைகளின் வரவு அதிகப்படுகின்றதென்பதாகும். தேசத்தில் உள்ள நாணயத்தின் அதிக இருப்பு காணப்படுமாயின், அத்தேசத்திலிருந்து வாங்குமளவு குறைந்திருக்கிறது என்பது போதரும். அன்றியும், காகித

நாணயங்களை அளவுக்குமிஞ்சி உற்பத்திசெய்து கொண்டிருந்தால் அது அதன் விலையில் குறைந்து படுமென்பதும் உறுதியாகும். ககூகச-ஆகஸ்டிலிருந்து இந்த அநுபவம் அநேக தேசங்கட்கு வந்திருக்கக்காண்கிறோம்; அவற்றிலும் ருஷியா ஆஸ்டிரியா ஜர்மனிதேசங்களே இவ்வநுபவத்தை மிகுதியாகப் பெற்றிருக்கின்றன. தனக்கு நேர்ந்த அதிகமான யுத்தச்செலவை, ஜர்மனிதேசமானது, காகித நாணயங்களை அளவுக்குமிஞ்சி யடித்து வந்ததனுலேயே பொறுத்துக்கொள்ளும்படியாயிருந்தது. பரிகாரக்கடன் தொகையின் பாதையினுலே, ஜர்மனியானது, யுத்தம் நின்று சமாதானம் ஏற்பட்ட பின்னருங்கூட, இத்தொழிலை நிறுத்திக்கொள்ள முடியாதிருந்தது. இத்தொழிலே, ஜர்மன்மார்க்கின் விலைக்குறைவை மேன்மேலும்தந்தது. யுத்தத்துக்குமுன் பவுனுக்கு உ0-மார்க்காக விருந்த தன்மையிலிருந்து கடந்து, சிலகாலத்துக்குப் பவுனுக்கு உ00, ந00, மார்க் விலையாகவுமிருந்தது. பிறகு சூ00, எ00, விலையிலும் இறங்கியது; ககூஉஉ-முற்பகுதியில் க000-விலையையுங்கடந்து ஏற்றமும் இறக்கமுமாகச் சிலகாலமிருந்தது. ஒரு ஷில்லிங்குக்கும் குறைந்த விலையில் ஆயிரமார்க் இருக்குமென்று சொல்லக்கூடிய அளவுக்கும் வந்து கொடுக்கல் வாங்கல் உலகத்தைப்பிரமிக்கவும் செய்துவிட்டது. ஆகையால், "அதனது நாணயமாற்று இவ்வளவு தாழ்வில் விழக்காரணமென்ன? மார்க்கின் விலையைக் குறைப்பது ஜர்மனியின் எச்சரிக்கைத்தன்மையா? அப்படியானல், ஏன்?" என்னும் விஷயத்தையறிந்துகொள்ள நாம் முயலவேண்டும்.

ஜனங்கள் பொதுவாக அந்நிய நாணயங்களை வாங்குவது அதனைச்செலவிடத்தானென்றும், அக்காரணத்தினுலேயே அவ்வந்நிய நாணயங்களின் வாங்கும் விலைபேற்றமானது, அதிமுக்யமாயேற்பட்டு விடுகிறதென்றும் நாம் முன்னமே சொன்னேம். ஒரு தேசத்து நாணயத்தின் விலைமதிப்பானது, அத்தேசத்தினரால் வாங்கப்படக்கூடிய ஆகாரம் உடுப்பு வாடகை வண்டிச்சத்தம் வக்கில் கட்டணம் வைத்தியக்கட்டணம் ஆதியவற்றின் மலிவு கிராக்கிகளையே பொறுத்திருக்கின்றது; ஆனல், அதேநாணயத்திற்கு அந்நிய நாட்டினரால் ஏற்படும் விலைமதிப்பானது, அந்நிய நாட்டினர் அந்

நாணயத்தால் அவர்கள் பெறும் வியாபாரப்பொருள்களின் விலையேற்றத்தாழ்வுகளையே பொறுத்திருக்கிறது; அதாவது அந்நிய நாட்டு வியாபாரத்துக்கேற்ற பொருள்களை வாங்குஞ்சக்தியைக் கொண்டே நாணயமதிப்பை அவர்கள் நிர்ணயிக்கக்கூடுமென்பதாம். ஜர்மனியில் அநேக பொருள்களும் கூலியும் வெகுமலிவு; ஆனால் வெளிநாடுகட்குப்போகும் பொருள்கள் விலையேறப்பெற்றவை. ஆதலால் உள்நாட்டுப் பொருள்களின் மலிவைநோக்கி மார்க் நாணயத்தின் மாற்றுவிலை மிகக்குறைவுபட்டிருக்கும். தவிர, இராஜீயப்பொருளாதார இடையூறுகளாலும், அந்நிய நாணயங்களை வாங்குபவர் குறைந்த விலையையே கொடுப்பார்கள். எந்த நேரத்தில் புரட்சிநேருமோவென்ற பயத்தாலும், மிதமிஞ்சிய காகித நாணயங்களின் தோற்றத்தால் நாணயவிலை அடிக்கடி மாறுபட்டிருப்பதாலும், ஒருதேசத்தின் நாணயங்களை நம்பிவாங்குதற்குயார் தான் துணியக்கூடும்? ஆகவே, வியாபாரச்சங்கடங்களும் ஜர்மன் மார்க்கின் விலையைக்குறைத்து விட்டன. ஆனால் எல்லாவற்றிலும் அதிமுக்யமான காரணம் அளவுக்குமிஞ்சிய காகிதநாணயங்களின் உற்பத்தியேயாகும்.

ஜர்மன் அரசாங்கம், அந்நியநாடுகட்கு அதிகமான பரிகாரக் கடன் கொடுக்கவேண்டியிருக்கிறது. தனவந்தர்களான ஜர்மன் வியாபாரிகளிடமிருந்து அரசாங்கத்தார் எதிர்பார்க்கக்கூடிய வரியை வசூலிக்கமுடியாமலிருக்கிறார்கள். அதன் காரணமென்னவெனில், அந்த வியாபாரிகள் அந்நியநாட்டுப்பாங்குகளில், தங்கள் பொருள்களைப் பவுநுகளாகவோ டாலராகவோ ப்ராங்காகவோ சேமித்திருக்கிறார்கள். வரி விதிக்கும்போது, ஒரு வியாபாரி ௨௫ லக்ஷம் மார்க்குகள் பெறுமானமுள்ள ப்ராங்குகளை ஸ்விஸ்பாங்கியில் வைத்திருக்கலாம். வரிகொடுக்குங்காலத்தில், அதே அளவுள்ள ஸ்விஸ்ப்ராங்குகள், மார்க்கின் விலைக்குறைவால் ௫0-லக்ஷம் மார்க்கு விலையாக மதிக்கப்பெறும். முதலில் விதித்ததீர்வையை வசூலிக்குங்கால், அது விகிதத்தில் குறைந்து அரசாங்கத்து வரும்படியில் குறைவையுண்டுபண்ணுகிறது. உதாரணமாக, ஒரு வியாபாரிக்கு ௧00-க்கு ௧0 அல்லது வருமானத்தின் பத்தில் ஒருபங்கு வரியாக விதிக்கப்பட்டிருக்கிறது; ௨௫-லக்ஷம் மார்க்குக்கு

வரி உ௦-லக்ஷம் மார்க்காகிறது. வரி வசூலிக்கும் காலத்தில் மதிப்பு லக்ஷமாகிறது; ஆனால் வரிமட்டும் முன் சொன்ன உ௦ லக்ஷம் மார்க்காகவே இருக்கிறது. அதனால் அந்த வியாபாரி ௧௦௦-க்கு ௫-விகிதமே வரி கொடுப்பவனாக ஆகிறான்; என்றால் அரசாங்கத்து வரும்படியில் ௧௦௦-க்கு ௫-விகிதம் குறைவுபடுகிறது. இவ்விதவரும்படிக்குறைவை ஈடுபடுத்துவதற்கே, அவர்கள் காகித நாணயங்களை அதிகப்படுத்துகிறார்கள். அதன் காரணமாக மார்க்கின் விலை குறைவுபட்டுக்கொண்டே வருகிறது. தவிர, மார்க்கின் குறைந்த விலையைக்கண்ட ஜனங்கள் மார்க்கைக்கையிருப்பில் வைத்துக்கொள்ளப் பிரியப்படாமல், பண்டங்களாக மாற்றித் தேவையானபோது விற்பனை செய்கிறார்கள். அதனால் வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக ஜனங்கள் வியாபாரஞ்செய்து வருகிறார்கள் என்று புலப்படுகின்றது. இதுவே அதிகமாக நாணயம் புரண்டு கொண்டிருப்பதற்குக் காரணமாகும்.

ஜர்மன் மார்க் எப்படி விலையில் குறைந்த தென்பதைக் கண்டு கொண்டோம். இனி அதன் காரணத்தை நன்கு ஆராய்வோம். ஜர்மன் மார்க்கு விலைக்குறைவினாலுண்டான கஷ்டம் ஜர்மனியரைக்காட்டிலும் அந்நிய வியாபாரிகட்கே அதிகமாக இருக்கிறது. ஜர்மனியக்கூலி ஜனங்கள் படும் துன்பம் மிகுதியே; அங்கு, கூலி வேலை செய்யாமல் வல்லமை பொருந்தியவர்களும் இருக்கிறார்கள். ஜர்மனி அந்நிய நாணயங்களை வாங்கவேண்டியிருக்கிறது. தனது நாணயங்கட்கு அந்நியநாடுகளில் அவசியத்தை யேற்படுத்தக்கூடுமானால், லாபகரமாய்த் தன் உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். ஜர்மன் மார்க்கை நாளுக்குநாள் விலைகுறைத்துக் கொண்டேவருவதனால், ஜர்மனியச் சரக்குகளை ஸரஸமாக வாங்கலாமென்றுவது வியாபாரங்களை அதிகமாய்ச் செய்துவரலாமென்றுவது, அந்நியர்கள் ஜர்மன் மார்க்குகளை அதிகமாக வாங்கத் தூண்டப்படுகின்றார்கள். இதனால் ஜர்மனியில் வியாபாரம் அதிகப்பட்டுக் கூலிவேலையும் அதிகப்பட்டது. மார்க்கின் விலையைக் குறைத்துக்கொண்டே போவதனால் வியாபாரம் செய்யஎண்ணியவரிடமிருந்து ஜர்மனி பெருத்த லாபத்தைபடைகிறது. ஜர்மனியச் சரக்குகளைவாங்கும் அந்நிய வியாபாரிகளிடமிருந்து, பவுனுகவா

வதுபோலாகவாவது ப்ராங்காகவாவது விலையைக்கோருகிறார்கள். மார்க்கின் விலை உள்நாட்டைக்காட்டிலும் வெளிநாடுகளில் அதிகக் குறைவுபட்டிருக்கிறது. உள் நாட்டில் மார்க்குகளாகக் கூலிகளைக் கொடுக்கும் வியாபாரிகள் இருவிதத்திலும் மிதந்த லாபமடைகின்றனர்.

மார்க்கின் விலையைக் குறைப்பதனால், ஜர்மனியானது தேசியக் கடனையும் குறைத்துக்கொண்டுவிடுகிறது. இது அந்நிய நாடுகட்குக்கொடுக்கவேண்டிய கடன் தொகையானது ௧௩௨,000,000,000 மார்க்குகளென்று வைத்துக்கொள்வோம்; அதனுடைய தேசியக் கடனும் அதே மதிப்பில் ௨௪௨,000,000,000 மார்க்குகளாகும். மற்றைத்தேசங்களின் கடன் தொகைகளைத் தங்கமார்க்குகளாகவும் தேசியக்கடன் தொகைகளை மார்க்குகளாகவும் கொடுக்கவேண்டி வரும். ஆனதால் மார்க்கின் விலைக்குறைவினால், இக்கடன் பளுவிலும் குறைவு ஏற்பட்டுவிடும். ஜர்மனி தன் வருஷ வருமானத்தில், ௧00-க்கு ௫0 கடன் வட்டிகொடுக்கவேண்டுமானால், இப்போது கொடுக்கவேண்டிய தொகை மிகக்குறைவேயாகும். ஜர்மனியின் வருஷ வருமானமானது ௧௨-கோடி மார்க்குகள் என்று வைத்துக்கொள்வோம்; அது ௧00-கோடி மார்க்கு ௩-வட்டி வீதம் கடன்வாங்கியிருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். தேசிய வரும்படி ௫00-கோடி மார்க்கானால், மார்க்கின்விலை ௧00-க்கு ௧000 ஆகிறபடியால், தேசிய வரும்படி ௫000 கோடி மார்க்காகும். அதே திட்டத்தில் வருமானமும் ௧௨0-கோடியாகும்; ஆனால் ௧00-கோடி கடன்போராவிநக்கும் வட்டி ௩-கோடி மார்க்கேதான். அதனால் ௧00-க்கு ௫0-வட்டி கொடுக்கவேண்டியதற்குப்பதில் ௧00-க்கு ௫ வட்டிமாத்திரம் தான் கொடுக்கிறது. இந்த நிலைமையில் கடன் பத்திரங்கள் அவற்றின் மதிப்பில் ௧0-ல் ௧-பங்குதான் தேறுதலாகின்றன. இவ்விதமாக மார்க்கின்விலைக் குறைவினால் ஜர்மனியின் தேசியக்கடன் ௫00-பங்கு குறைந்துவிட்டதாகிறது; அதாவது ஜர்மனி லாபமடைந்த அளவு அந்நிய கடன் தேசங்கள் நஷ்டமடைந்திருக்கின்றன.

விலைபேறும் என்ற நோக்கத்துடன் லக்ஷக்கணக்காக மார்க்குகள் வாங்கியிருக்கும் அந்நியர்களாலும் ஜர்மனி லாபமடைந்துவரு

கிறது. எப்படியெனில், இவர்களிடத்திலிருக்கும் மார்க்குகளுக்கு ௪00-க்கு ௫ விலையேனும் வருமோ வென்பது ஸந்தேகந்தான். ஏற்கனவே அநேகர் மார்க்கின் காகித நாணயங்களைச் சாதாரண காகித விலைக்கும் விற்றிருக்கிறார்கள்.

ஜர்மனி தனது நாணய விலையைக் குறைப்பதை நிறுத்துமா? நிறுத்தினால் தான் அதன் தேசியக் கடன்பத்திரங்கள் அவற்றின் மதிப்பைப்பெறும். காகித நாணயங்களை வைத்திருப்பவர்கள் அதிகமான ஜர்மனியப் பொருள்களை வாங்கமுடியும். ஜர்மனி இதைச்செய்யுமா? ஜர்மன் அரசாங்கம் கடனாளியாயிருப்பதால் ஜர்மன் தேசம் கடனாளியாவதற்கு நியாயமேயில்லை.

ஹெர்ஸ்டிஸ் கம்பெனியார்பரிகாரக்கடன்களைக்குறைக்க இன்னமும் ஒரு வழியைக் கண்டுபிடிக்கலாம். இப்போதுள்ள அரசாங்கத்தின் கடன் பொறுப்புகளை அடியோடு நீக்குதற்கு ஒரு புரட்சியான வழியை அவர்கள் ஜயம்பெறக்கூடியபடி நடிக்கக்கூடும். மார்க்கின் விலைக்குறைவு அதாவது ஏதோ ஒரு அளவுள்ள தங்கம் ௬0,000 காகித மார்க்குகள் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. பண விஷயத்தில் விபரீதமானமோசம் செய்ய அவர்கள் முற்படுவார்களோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் கடவுளொருவரே அறிவர்.

குறிப்பு:—மேலே காணப்படுகிற விஷயங்கள் மாடர்ண் ரிவ்யூ பத்திரிகையில் வெளியானவையாகும். ஷெ நிருபர் ஒரு பவுனுக்கு ௫000 மார்க் ஆகக் கணக்கிட்டுப் பேசுகிறார். இப்போது ஒரு பவுனுக்கு ௧0௫,000 மார்க் ஆக இருக்கிறபடியால் ஒன்றற்குப் இருபத்தொருபங்கு அதிகப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த நிலையானது வியாபார நிலைமையாலுண்டானதன்று. ஜெர்மன் கவர்ன்மெண்டாரே வேண்டுமென்று இந்த நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறபடியால் ஷெ கவர்ண்மெண்டாரே மீண்டும் விலையை ஒழுங்குபடுத்திவிட முன்வரமாட்டார். வருவதானாலும் அசாத்தியமான காரியமாகும்! ஒருவாறு அந்நாட்டு ஜனங்கள் ஜனநாயக முறையில் கவர்ண்மெண்டார் வெளியிட்ட நோட்டுகட்குப்பணங்கொடுக்க வருவார்களென்பது நினைக்கவும் முடியாததொன்றாகும். இந்த நிலையில் நமது நாட்டினரிற் பலரும் மார்க் காகிதங்களை வாங்கிவைத்திருக்கின்றனர். இஃதொரு வியாபாரப் பொருளாக விளங்குகிறது. சொற்பப் பொருளைக்கொடுத்துவிட்டுப்பெரும்பொருள் திரட்டிவிட

இஃதோர் வழியாகுமென்று பலர் நம்புகின்றனர். அப்படி விமோசனமாகிற பக்குவத்தை ஜெர்மன் மார்க்குகள் இழந்து பலநாளாகிவிட்டன. கையிலிருப்பதை எங்ஙாவது அனுப்பி அகப்பட்டதைப் பெறுதல் நலம். இனிவாங்காதிருக்கவேண்டுமென்று நமது நண்பர்களை நாம் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஜெர்மனியர், உலகத்துமக்களுள் புத்திமான்களென்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளல் வேண்டும். மார்க் நாணயம் ஒரு பவுனுக்கு எந்தெந்தக்காலத்தில் எப்படியிருந்ததென்பதை இங்கெடுத்துக்காட்டுகிறோம்.

ககூஉ0	ஆகஸ்டு.	க.	ககூ0
ககூஉக	ஆகஸ்டு.	க.	உகூ0
ககூஉஉ	ஜனவரி.	க.	அ00
,,	மார்ச்.	க.	ச000
,,	ஆகஸ்டு.	க.	உகூ00
,,	ஆகஸ்டு.	ஙக.	சுகூ00
,,	அக்டோபர்	உங.	உ0,000
,,	டிசம்பர்.	க.	ஙசரு00
ககூஉங	ஜனவரி.	க.	ஙச000
,,	ஜனவரி.	உஉ.	ச0ரு000

பா—ர்.

புத்தகாலயங்கள்.

I

ஒரு நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு அந்நாட்டில் ஏற்பட்டுள்ள புத்தகாலயங்கள் (Libraries) முக்கிய காரணமாம். இதற்கெனவே யுலகில் தற்போது புத்தகாலயங்களை விருத்தி செய்தல் என்றதோரியக்கமும் தோன்றி வளர்ந்து வருகிறது. இவ்வியக்க வளர்ச்சிக்கெனவே தங்கள் ஆயுளையர்ப்பணம் செய்து வரும் பெரியோர்களும் பலிருக்கின்றனர். ஒரு பாஷை தன்னுருவழியாது உயிர்வாழ வேண்டுமானால் அப்பாஷையிலெழுதப் பட்டுள்ள நல்ல நூல்கள் (புத்தகங்கள்) பாதுகாக்கப்பட வேண்டும். இக்கருத்தை யுணர்ந்தே பூர்வத்தில் நந்தமிழரசர்களும் தம் பாது

காப்பின்கீழ் புத்தகாலயங்களை யேற்படுத்தி அவற்றில் பல அரிய நூல்களைத் தேடிவைத்துக் காத்துவந்தனர். இதனாலேயே தமிழ் மொழியில் நம்முன்னோர்க ளியற்றிய பல நூல்களிற் சிலவாயினும் இப்பொழுது நமக்குக் கிடைத்து வருகின்றன. தமிழ்நாடு வேற்றரசர்களின் படையெழுச்சிக் குட்பட்டுப் பல துன்பங்களுக் குள்ளானமையாலும், மற்றுஞ்சில காரணங்களாலும் நம்முன்னோர் களியற்றி யுதவிய மாபெருநூல்களி லநேக மின்றைக்குப் பெய ரளவினு மின்றி மறைந்தொழிந்தன வென்பதைக் கேட்டுத் தமிழறிஞர்களடையுந் துன்பத்தை யளவிட லரிதாம். அச்சிடுதல் முதலிய அரியசாதனங்க ளேற்பட்டுள்ள இக்காலத்தில் புத்தகங் களைப் பாதுகாக்கப் பலவழிக ளேற்பட்டுள்ளன. நிற்க, நாட்டில் பொதுவில் மக்களிடையில் கல்வி சர்வ சாதாரணமாய்ப் பரவுவதற் குப் புத்தகங்களும், பத்திரிகைகளுமே இக்காலத்திற் கேற்ற சாதனங்களாம். அப்புத்தகங்களையும் பத்திரிகைகளையும் எளியோர் முதல் எல்லோருக்கும் சுலபத்தில் எட்டச் செய்வது புத்தகாலயங்களென்ற வாசக சாலைகளேயா மென்பதை இங்கு கவனிக்கவேண்டும். தற்போது கல்வியிலும், செல்வத்திலும், நாகரிகத்திலும் மேம்பாடுற்று விளங்கும் ஒவ்வொரு தேசமும் புத்தகாலயங்களின் பயனை நன்குணர்ந்து அவற்றை விருத்திசெய்து வந்திருக்கின்றன. அவ்விதம் புத்தகாலயங்களை யேற்படுத்திப் போஷித்துவரும் விஷயத்தில் இதுபொழுது அமெரிக்காவே தலைசிறந்து விளங்குகிறது. அத்தேசத்தில் இவ்விஷயமாகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் வியக்கத்தக்கனவா யிருக்கின்றன. அங்கு எண்ணிறந்தபுத்தகாலயங்கள் தோன்றி நாடெங்குங்கல்வியறிவைப் பரவச்செய்து வருகின்றன. புத்தகாலயங்களை விருத்திசெய்வதற் கெனவே துரைத்தனத்தார் ஒரு இலாகாவை யேற்படுத்த முயல்கின்றனர். அதற்கெனவே ஏராளமாகப் பணத்தைச் செலவழிக்கின்றனர். ஒவ்வொரு ஊர்கடோறும் புத்தகாலயங்களைக் காண முயல்கின்றனர். அந்நாட்டுக்கே பொதுவான மிகப்பெரிய புத்தகாலயங்களேற்படுத்தியிருக்கின்றனர். அந்நாட்டில் புத்தகாசிரியர்கள் தாம் வெளியிடும் புத்தகங்களில் வகைக்கொரு பிரதியை தலைமைப் புத்தகாலயத்திற்குத் தவறாது கொடுக்கவேண்டுமென்ற

விருத்தியுமுண்டு. இதுபோன்ற முயற்சிகள் ஆங்கு பல நடைபெறுகின்றன. இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, முதலிய தேசங்களிலும் இம்முயற்சி பிரபல மடைந்திருக்கிறது. நம்மிந்தியாவிலோவெனில் இப்பொழுதே ஆங்காங்கு இதைப்பற்றிச் சிறிது சலனமேற்பட்டிருக்கிறது. நமது நாட்டில் புத்தகாலயங்களை யேற்படுத்துதலென்பது புதுமையல்லாதிருப்பினும், இடையில் நெடுநாள் நாம் அதைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காது விட்டு விட்டமையின் இப்பொழுது பிறரைக்கண்டே நாம் விழிப்படைய வேண்டியிருக்கிறது. இந்தியாவில் புத்தகாலயங்களின் வளர்ச்சியிற் கருத்தைச் செலுத்திப்பாடுபட்டு வருவதில் முதன்மை பெற்றிருப்பது பரோடா ராஜ்யமாகும். அச்சமஸ்தானாதிபதியாகிய கைக்வார் மஹாராஜா அவர்கள் இவ்விஷயத்தில் மிகவும் ஊக்கங்கொண்டு பாடுபட்டு வருகிறார். குடிகளும் அவரது முயற்சிக்குத் துணை நின்று இவ்விஷயத்தில் சில வருடங்களுக்குள் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கின்றன. அச்சமஸ்தானத்தில் தற்போது இவ்வியக்கத்தின் பயனாய்ச் சற்றேறக்குறைய நூற்றுக்குத்தொண்ணூறு வீதம் மக்கள் கல்வி பயின்றிருக்கின்றனவென்றால் இதன் சிறப்பு நன்கு புலனாம். இப்படியே தென்னிந்தியாவில் (தமிழர்களாகிய) நமக்கருகாமையிலிருக்கும் ஆந்திரர்களும் தமது ஜில்லாக்களில் இவ்வியக்கத்தைக்கண்டு வளர்த்துவருகின்றனர். தெலுங்கு ஜில்லாக்களில் ஒவ்வொருகிராமங்கள் தோறும், கிராமப் புத்தகாலயங்களென்றும், தாலுகாக்களில் அவற்றிற்குத்தலைமையாக தாலுகா புத்தகாலயங்களென்றும், அப்படியே ஜில்லாக்களின் சார்பாகவும், தம்மாகாணத்தின் சார்பாகவும் ஜில்லா, மாகாண தலைமைப் புத்தகாலயங்களென்றும் ஏற்படுத்துவதற்கு முயன்று கூடிய வரையிற் பயன்கண்டுவருகின்றனர். அவர்களின் முயற்சியினால் ௧௯௨௦-௵த்திய கணக்கின்படி ௮௦ தெலுங்கு ஜில்லாக்களிலும் ௯௦௦-புத்தகாலயங்கள் வரையேற்பட்டு வேலைசெய்து வருகின்றன. வருடந்தோறும் ஜில்லாக்களின் சார்பாகவும், மாகாணத்தின் சார்பாகவும் புத்தகாலய மகாநாடுகள் நடைபெற்றுவருகின்றன. சிறந்த தேசாபிமானிகள் பலர் தம்முடல் பொருளாவி மூன்றையு மிவ்வழியிற் செலவிட்டுத் தாய் பாஷையினுடையவும், தாய் நாட்டினுடையவும் முன்னேற்றத்திற்

குழைந்து வருகின்றனர். ஆந்திரதேச புத்தகாலயங்களின் வளர்ச்சிக்கெனவே பிரத்தியேகமாக "கிரந்தாலய சர்வஸ்வம்" என்ற பெயரால் ஒரு சிறந்த பத்திரிகையும் பிரசுரிக்கப்படுகிறது. அதிற் சிறந்த பண்டிதர்களால் புத்தகாலயங்களின் வளர்ச்சிக்கும், பாஷாபிவிருத்திக்குமுரிய பல சிறந்த கட்டுரைகள் வரையப்படுவதோடு, ஆங்காங்கே ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் புத்தகாலயங்களின் வளர்ச்சிக் குறிப்புகளும் பதிக்கப்படுகின்றன. அநேகமாக எல்லாப் புத்தகாலயங்களும் தாய்மொழியிலும், பிறமொழிகளிலும் இயன்றவரை பல புத்தகங்களைச் சேமித்துவைத்தும், பல பத்திரிகைகளை வரவழைத்தும் வாசகர்களுக்குதவி செய்து வருகின்றன. ஓர் எளியவன் பல புத்தகங்களையும், புதினங்களையும் சொந்தத்தில் வாங்கி வாசித்து அறிவு வளர்ச்சிபெறுவதென்பது முடியாத காரியம். புத்தகாலயமொன்றிருப்பின் அங்கு இலவசமாகவாயினும், சொற்ப சந்தா செலுத்தியாயினும், பல புத்தகங்களையும், புதினங்களையும் சுலபத்திற் பெற்று வாசிக்கமுடிகிறது. நிற்க, ஆந்திர தேசத்திலேற்பட்டுள்ள புத்தகாலயங்களிற்சில, தேசிய முறைகளிற் பாடசாலைகளை யேற்படுத்திக் கல்விகற்பித்து வருகின்றன; மற்றுஞ்சில, பத்திரிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும், புத்தகங்களையும் தக்க பண்டிதர்களைக்கொண்டு எழுதிவெளியிடுகின்றன; வேறு சில, தாய்மொழியிற் போட்டிப் பரீக்ஷைகளை யேற்படுத்தி நடத்திவருகின்றன; மற்றுஞ்சில, புராதன ஏட்டுப் பிரதிகளைத் தேடிச்சம்பாதித்து அச்சிட்டு வெளியாக்குகின்றன; இன்னுஞ்சில, அசையும் படக்காக்ஷிகளைக்கொண்டு மக்களுக்கு அறிவையூட்ட முயலுகின்றன. பொதுவாக அப்புத்தகாலயங்கள் யாவும் தாய்மொழி வளர்ச்சிக்கே முக்கிய கவனம் செலுத்திவருகின்றன. இதனால் அந்தத் தாய்மொழிப் பத்திரிகைகளுக்கு நல்ல கௌரவமுண்டாயிருக்கிறது. சர்வகலாசாலைப்பட்டதாரிகளும் தாய்மொழிப் பத்திரிகைகளையே வெகு ஆவலோடு படிக்கின்றனர். தாய்மொழியிலேயே கட்டுரைகள் வெகு சிறப்பாக வரைகின்றனர். விஞ்ஞான சாஸ்திர நூல்கள் பலவற்றைத் தாய்மொழியில் வெளியிடத் தொடங்கியிருக்கின்றனர். இதுகாலை இந்தியாவில் முதன்மையடைந்துள்ள பாஷைகளில் வங்காளிக்குப்

பின்னர் ஆந்திரபாஷையே குறிப்பிடப்படுகிறது. இன்னுமிரண்டொரு வருடங்களில் ஆந்திரதேசம் இந்தியாவில் ஒப்பற்ற நிலையை யெய்துமென்பது மிகையாகாது. ஆகிய இவ்விஷயங்களைக் கூறிமுடித்த பின்னர் நந்தமிழ் நாட்டினிடத்து நமது கவனத்தைச் செலுத்தினால் நாம் பெரிய ஏமாற்றத்திற்குள்ளாகிறோம். நந்தமிழ் மன்னர்கள் செங்கோலோச்சிய காலத்தில் தமிழ் மொழியும், தமிழ் நூல்களும் போற்றி வளர்க்கப்பட்டுவந்தன. அம்மன்னர் தம் அரசவையையடுத்துப் புத்தகாலயங்களை யமைத்துப்பல அரிய நூல்களை யதிற்சேமித்து வைத்து வந்தனர். அம்மன்னர் வீழ்ச்சிக்குப் பின்ன ரவையாவும் மறைந்தன. ஆயினும் முன்னிருந்ததற்கறிகுறியாகத் தஞ்சாவூரிலும், மதுரையம்பதியிலும், மற்று மிரண்டோரிடங்களிலும் பூர்வீக அரசர்கள் ஸ்தாபித்த புத்தகாலயங்களிலோர் சிலபாகம் இன்னுமிருந்துவருவதைக்காணலாம். இருப்பினும் நந்தமிழ் மொழியும், நந்தமிழ் நூல்களும் அக்காலத்திருந்த நிலையையும், தற்போது சீர் கேடடைந்திருக்கும் நிலையையும் உன்னுந்தோறும் நம்முள்ளம்பற்றியெரிகிறது. நமது ஆந்திர சகோதரர்களாகிய அயல் ஜில்லா வாசிகள் தீவிரமாக வேலைசெய்து வரும் இக்காலத்தில் அவர்களைக் கண்டேனும் தமிழர்கள் விழிப்படையாதிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். இதுகாலை, நந்தமிழகத்தில் எத்தனை புத்தகாலயங்களேற்பட்டுள்ளன? புத்தகாலயங்களை யேற்படுத்தவேண்டுமென்று எத்தனைபேர் முன்வந்து முயற்சித்தனர்? இதைப்பற்றி எத்தனை சபைகள் நடந்தன? இவ்வியக்கத்தைப்பற்றி எத்தனை பத்திரிகைகள் எழுதின? இனியேனும் இதைப்பற்றித் தமிழ்ச் சகோதர சகோதரிகள் கவனிப்பார்களா?

என். வேங்கடரமணன்.

"ஆநந்த நிலயம்" சேலம்.

மூன்று துயரங்கள்.

தட்டா னிடத்தினிற் றங்கப் பணிகள் சமைப்பதுவும்
வட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கி லுள்ளதைக் காகிதத் தச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனதைப் பலவாறு நாளுந் துயர்செய்யுமே.

—தண்டபாணி சுவாமிகள்.

திருநாமப் பெருமை.

முருகக் கடவுள்.

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்ச மரந்தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

—நக்கீர தேவர்.

மருநாண் மலர்ப்பொழி லுடுத்ததட மெங்குமலை
வாய்கொழித் தெறியு முத்தை
வண்டலிடு மெக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுளெங்
குருநாத னொருதெய்வ யானைதன் பாகங்
குறக்கொடிக் குந்தழைசிறைக்
கோழிக் கொடிக்குங் குமார கம்பீரன்
குறும்பிறை முடிக்கும்பிரான்
இருநாழி நெற்கொண்டு முப்பத்தி ரண்டறமு
மெங்குமுட் டாதளக்கும்
இறைவிதிரு முலையமுத முண்டுஞா னம்பெருகு
மெய்ப்பிரா னினியபிள்ளைத்
திருநாம மெழுதுவார் கற்பார் படிப்பார்
செகம்பொரு வறப்புரந்து
தேவாதி தேவரும் பரவுசா யுச்சியச்
சிவபதத் தெய்துவாரே.

—பகழிக்கூத்தர்.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

—அருணகிரிநாதர்.

வீரகாகளம்.

(வெற்றிவீரன் எழுதுகிறார்.)

வீரம் என்பது எல்லோருக்கும் கிடைக்கும் பொருளன்று. அது பிறப்பிலேயே பொருந்தவேண்டும். வீரர்கள் ஏகதேசத்தில்தான் உலகில் பிறக்கின்றார்கள். மனிதர்களில் பெரும்பாலார் தூங்குமூஞ்சிகளாகவும் அழுமூஞ்சிகளாகவும் பயங்காளிகளாகவுமிருந்து இன்பமற்ற வாழ்க்கை—சாமூஞ்சி வாழ்க்கை—அழுகல்வாழ்க்கை வாழ்ந்து அரையுயிருங் குறையுயிருமாகத் திரிந்து இறந்தொழிந்து போகிறார்கள். இவர்களை இருக்கிறபோதாவது செத்தபிறகாவது யாரும் கவனிக்கிறதில்லை. இப்படிப் பிறந்து இறந்தழிந்து போகின்ற மனிதர்களை மற்றவர் கவனிக்க அவசியமென்ன விருக்கிறது? எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் மாடு கன்று நாய் கழுதை யெல்லாம் பிறக்கின்றன. அவற்றுக்கெல்லாம் சரித்திரம் நிகழுமோ? கிடையாது. இந்த மக்களிடத்தில் வீரம் கலந்திருக்குமாயின் உலகமெல்லாங் கொண்டாடுகிறது. இருக்கும்போதும் புகழ். இறந்தபிறகும் புகழ். என்றென்றும் புகழ்ச்சிதான். சுருக்கமாகச் சொன்னால் வீரர்கள் புகழ்வடிவமாகி விடுகிறார்கள். வீரத்தங்களிடத்தில் வேறென்ன இருக்கிறதென்று யாருங் கவனிப்பதில்லை. ராஜாவானாலும்சரி. பிச்சைக்காரனானாலும்சரி. கல்விமானாயினும்சரி. நிரக்ஷரக்குக்ஷியாயினும் சரி. உயர்ந்த ஜாதியாயினும் சரி. தாழ்ந்த ஜாதியாயினும் சரி! ஏது எப்படியிருந்தாலும் வீரனாயின் அவனை உலகம் போற்றிவிடுகிறது. அந்த வீரமானது கல்வியிற் சென்றாலும் போர்முனையிற் சென்றாலும், பக்தியிற் சென்றாலும், தருமத்தில் சென்றாலும், நீதியிற் சென்றாலும், உண்மையிற்சென்றாலும் கேவலம் பணத்திற் சென்றாலும் சரிதான். வீரவாழ்க்கையாக நிகழுமாயின் அந்தவாழ்க்கை பயன் பெற்றுவிடுகிறது. ஆஹா! என்னே வீரத்தின்பெருமை. வீரரைப்பற்றிப்பேசுவதும் எழுதுவதும் கேட்பதும் படிப்பதும் புண்ணியமன்றோ? இப்படிப்பட்ட அருமையான அற்புதமான ஆநந்தமான வீரவாழ்க்கை வாழவே ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

* * *

சுத்தவீரர் கூட்டத்திற் சேர்ந்தவர்களுள் குமணராஜனும் ஒருவர். இந்தக் குமணமன்னன் கடையெழு வள்ளல்களுள் ஒருவர். இவர் கருணைக்கு உறைவிடம். தமிழுக்குத் தாயகம். இந்தமன்னன் அரசாண்டபோது கேட்டவர்களுக்கெல்லாம் கேட்டதைக் கொடுத்துத் துன்பமில்லாது இன்பமயமான வாழ்வு கொடுத்துவந்தார். இதனையறிந்த இவர் தம்பி அமணன், "இப்படி அள்

ளிக்கொடுத்துக்கொண்டிருந்தால் ராஜ்யம் அழிந்துபோகும்; பணத்தின் அருமை உனக்குத்தெரியவில்லை; ஆகையால் ராஜ்யத்தை யென்கையில் கொடுத்து விட வேண்டும்'' என்று கூறினன். கொடைச்செல்வமே செல்வமென்று ணர்ந்த குமணவீரன், என்னசொன்னர்! “தம்பி! இந்த நிலையற்ற ராஜ்ய வாழ்வு யார்கேட்டபோதிலும் நான் வழங்கக் கூடியதுதான்; நீயேகேட்கும்போது இல்லையென்று சொல்வேனே; எடுத்துக்கொள்.'' என்று சிம்மாசனத்தை விட்டு இறங்கிச்சென்றுவிட்டார். ஊரிலுள்ள ஜனங்களெல்லாரும் கண்ணீர் விட்டார்கள். பழைய மன்னன்—கொடைவள்ளல்—குமணவள்ளல் காட்டினிடமாகத் தவம்புரியச் சென்றுவிட்டார். புதிய மன்னனிடத்தில் ஜனங்கள் வெறுப்புக்கொண்டு முறுமுறுத்தார்கள். பார்த்தான் அமணன்! தமையன் உயிருடனிருந்தால் மறுபடியும் வந்து ஜனங்களைத் திரட்டிச்சேர்த்துக்கொண்டு ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்வானென்ற பயந்தோன்றிற்று. குமணனுடைய தலையைக் கொண்டுவருபவர்க்கு கோடிபொன் தருவேன் என்று பறை சாற்றுவித்தான். சிலநாள் சென்றன. நீண்ட தூரத்திலுள்ள ஒரு தமிழ்வித்துவான் குமணசக்ரவர்த்தியின் கொடையின் பெருமையைக் கேள்விப்பட்டு வந்துசேர்ந்தார். இங்கே அமணராஜன் அரசாள்வதையறிந்து குமணவள்ளலைத்தேடிக் காட்டிற்குச்சென்று கண்டார். மன்னன் இருக்கிற நிலையை நன்ருகவறிந்தும் அந்த இன்னிசைப்புலவன் தனது வரம்பற்ற தரித்திரத்தின் வலிமையால் யாசகம் கேட்டார். “துன்பமுறுகிறேன் பணங்கொடு.'' என்ற வார்த்தையைக்கேட்டார் குமணவீரன். சுத்தவீரன், உபகரணங்கள் இல்லாவிட்டாலும் செய்வினையில் தோல்வியுற்ருலும் புறமுதுகிட மாட்டானன்றே? “ஐய! புலவீர்! முற்காலத்தில் வாராதுபோனீர்! ஆயினும் பாதகமில்லை. என்னுடைய தலை கோடிபொன் பெறக்கூடியது. இதனைக் கொண்டுபோய் என் அருமைத்தம்பியிடம் கொடுத்துப்பொன்பெற்றுச்சுகமாக வாழ்வீராக.'' என்றுகூறி உடைவாளை உறை நீத்து வித்துவான் கையில் கொடுத்துத் தலையைத்தாழ்த்தி நின்றார். என்னே! இவரது வீரம்! ராஜ்யம் போனாலென்ன? உயிர்போனாலென்ன? எதுபோனாலென்ன? அவசியமில்லை. யார் எதைக்கேட்டாலும் கொடுப்பதே உறுதியென்று கொண்டார். இது தான் வீரம். இப்படி மக்கள் இப்போது எத்தனைபேரிருக்கின்றனர்?

*** *** ***

சூரியகுல அரசர்களில் சிபிச்சக்ரவர்த்தியொருவர். இவர் உதவியற்றவர்களைக் காப்பாற்றுவதுதான் மனித தர்மமென்பதை யுறுதியாகக்கைக்கொண்டவர். இவர் ஏக சக்ராதிபதியாக ராஜ்யபாரம் செய்துவரும்போது ஒரு நாள் தமது உத்யானவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அப்போது ஒரு பருந்தானது ஒரு பறவையைத்தூக்கிக்கொண்டு வந்தது. புருவானது பதறி அலறிக்கொண்டு சிபிச்சக்ரவர்த்தியினிடம் விழுந்தது. அரசன் அதனை யெ

தேத்துத்தூடியில்கொடுத்து அதன்கேப்பை மாற்றிக்கொண்டிருந்தார். பருந்து வந்து, "அரசனே! இதனை நான் தூக்கிக்கொண்டுவந்தேன். எனக்குப் பசியதிகமாயிருக்கிறது. புறாவைக்கொடுத்துவிடும்" என்று கூறியது. கருணையே வடிவான அரசன் கொடுப்பானு? கொடுக்கவில்லை. வேறு எதைக்கேட்டாலுந்தருகிறேன்; புறாவைத் தாமுடியாதென்றான். பருந்து "தனக்குப் புலால் உணவுதான் வேண்டும். வேறொன்றும் வேண்டாம்" என்று கூறி விட்டது. அரசன் என்ன செய்தான்! தெரியுமா? வயிற்றுவலியுண்டானுலும் தலைவலித்தாலும் ஏழையாடு கோழிகளைச்சாகச்சொல்லிக் கொல்லுகிற பாவிமக்களைப்போல எதையாவது பிடித்து அறுத்துக்கொடுத்தாரா? அல்லது அக்கிரமம் செய்கிற அந்தப்பருந்தையாவது கொன்று தொலைத்தாரா? இல்லை. எவ்வுயிரும் தம்முயிர் போற் கருதுகிற ஒருமன்னன் எந்தவுயிருக்காவது தீங்கு புரிவானு? மாட்டான். ஒரு தாரசை, கொண்டுவந்தனர். ஒரு தட்டில் புறாவை வைத்தார். உடைவாளை உருவினர். தொடையிலிருந்து சதையை அறுத்தறுத்து வைத்து ஈடுசெய்தார்! எப்படியிருக்கிறது இந்த மன்னர் பெருமானின் கருணைவீரம்! ஒரு புறாவின் நிமித்தம் சக்ரவர்த்திப்பதவியையும் உலகவாழ்வையும் உடலையும் விட முன்னின்றார். என்னபோனாலும் கொள்கையை நிலை நாட்டுபவரன்றோ வீராத்கங்களாவர்! தமிழ் நாட்டில் இப்படி வீரர்கள் பலர்தோன்றவேண்டும்.

* * *

இந்து மக்களில் இராமாயணத்தை யறியாதாரில்லை. இராமாயணம் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணம் சீதாதேவியின் வீரமேயாகும். அந்தப் பெண்ணரசியை இராவணன் கொண்டுபோனான்; அசோகவனத்தில் சிறைவைத்தான்; கேடுகாலம் நெருங்கிவர்தவுடன் பாரதநாட்டுப் பெண்மணியை— கற்பரசியை— இன்பவிளக்கை— ஜனகராஜன் செல்வப்புதல்வியைக் கொண்டுபோய் சிறைசெய்தான் இராவணன். அந்தக் கற்புக்கரசியாதுசெய்தார்? இராவணனுடைய செல்வத்திலும் செல்வாக்கிலும் சுகபோகங்களிலும் மயங்கினரா? இல்லை. இராமபிரானுக்கு நெஞ்சையிடமாக்கிவிட்ட சீதாதேவியின் மனத்தில் வேறுபொருள் எப்படிப் பொருந்தும்? வைத்தார் ஒருசபதம்! தன்கணவனிடத்திருந்து பிரிக்கும்போது எப்படி யிருந்தாரோ அதே கோலத்துடன் கொடுங்கோலன் ராஜ்யபாரம் அழியும்வரை இருப்பதென்று முடிவு செய்து விட்டார். இராவணன் நயமாகப் பேசினான்; கெஞ்சினான்; அரற்றினான்; பயப்படுத்தினான்; கஜகர்ணம் போட்டான். எதாவது பலித்ததா? இல்லை. யார் என்ன செய்யினும் என்ன பேசினும் தான் கொண்ட கொள்கையைச் சாதிக்கும் நெறியில் நின்ற வீர ரத்கம். இப்படியான வீரப்பெண்மக்கள்தாம் உலகிற்குத் தேவை. அழுமூஞ்சியும் சாமூஞ்சியும் தேவையில்லை. ஹே! சீதாதேவி! திரும்பி வருவாயாக. உலகிற் கற்பின் பெருமையை நிலைபெறச் செய்வாயாக.

பழமொழிக்களஞ்சியம்.

(முதுமொழிக்காஞ்சியார் எழுதியது)

பாவமென்றும் புண்ணியமென்றும் இரண்டு. பாவமென்பது பிறருக்குத் துன்பத்தை விளைவிப்பது. புண்ணியமென்பது பிறருக்கு இன்பமுண்டாகுமாறு உதவிபுரிவது. நாம் எல்லோரும் பாவத்தைச் செய்தல் கூடாது. புண்ணியத்தைச் செய்யவேண்டும். இப்படித்தான் பெரியோரும் விதித்திருக்கிறார்கள். பாவத்தைச் செய்தாலும் புண்ணியத்தைச் செய்தாலும் அநுபவித்துத்தான் தீரவேண்டும். "தாம் செய்கிற பாவத்திற்குப் பலன் இப்பொழுதா வரப்போகிறது? வரும்போது பார்த்துக்கொள்ளலாம்." என்றுசொல்லிக்கொண்டு இப்போது கிடைக்கும் அற்ப இன்பத்தைக்கருதி அநியாயமான பாவங்களைச்செய்ய முயல்கின்றனர். "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்."

*** *** ***

பாவம் செய்வதிலும் தெரியாமற்செய்வது, தெரிந்துசெய்வது என்று இரண்டுவிதமுண்டு. தெரியாமற் செய்துவிட்டால் அதற்கு விமோசனமுண்டு; பிராயச்சித்தம் செய்துகொள்ளலாம். தெரிந்து செய்தால் பிராயச்சித்தமுமில்லை. நமது சகோதர சகோதரிகட்கு ஆடு கோழிகளின் கழுத்தை அறுத்து உரித்து அவித்துத் தின்பது மகாபாவமென்பது தெரியாத விஷயமன்று. பாவமென்று நன்றாகத் தெரிந்திருந்தும் ஆசை வசப்பட்டுப் பாவங்களுக்கெல்லாம் தலைமை பெற்றதான கொலைப் பாவத்தைக் கூசாமல் செய்து உண்டு ஏப்பமிட்டு விடுகின்றனர். "அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுதுதான் தொலைக்கவேண்டும்."

*** *** ***

அநேகம் மக்கள் சிவபெருமான் மஹாவிஷ்ணு விநாயகர் சுப்பிரமணியர் அம்பிகை சரஸ்வதி லக்ஷ்மி முதலிய தெய்வங்களை வணங்கி வழிபடுகின்றனர். மற்றுஞ்சிலர் காளி கறுப்பண்ணன் நொண்டி சப்பாணி ராக்காயி மூக்காயி பேச்சியாயி தொட்டியத்தான் முதலியவற்றைக் கும்பிட்டு விழுகின்றனர். அருளும் அன்பும் எங்கே நிறைந்திருக்கிறதோ அங்குதான் கையெடுத்துக் கும்பிட யோக்யமுண்டு. மனமடங்கி சாந்தப்பட்டாலல்லாமல் மோ

ஸுகமாவது இன்பமாவது கிடையாது. இந்தச் சில்லரைச்சாமிக ளிருக்குமிடங்களில், கத்தியெடுத்தாடா! பதமாயிருக்காடா! ஆட்டைக்கொண்டாடா! வெட்டடா! தோலையுரியடா! என்ற கோரமான கூப்பாடும், உடல் நடுங்க வாய்பதறக் கால்பதறக் கைபதற ஆடுகோழிகள் பதறிக் கதறக் கத்திகொண்டு கழுத்தறுத்து வணங்கப்பெறுவது ஒரு தெய்வமாகுமா? அருளற்ற—அன்பற்ற கொலைக்களத்தில் குடியிருக்க ஒரு தெய்வம் விரும்புமா? விரும்புவது உண்மையானால் அத்தெய்வம் நமக்கு நன்மையைச் செய்யுமா? கொலைத்தொழிலால் நாம் செய்த புண்ணியமெல்லாந் தொலைந்து போகுமே! அருளற்ற சில்லரைச் சாமியிடத்தில் அருளைப்பெறவிரும்பி உயிர்வதைசெய்தால், என்றுமுள்ள இறைவனருள் விலகிவிடுமே! என்ன செய்கிறது? "பிள்ளை தேடப் போனவிடத்தில் புருஷனைப் பறிகொடுத்தலாகாது"

⁂ ⁂ ⁂

சில ஆசாமிகள் வெளியிலே வரும்போது அழகாக வருகிறார்கள். கூட்டங்களில் நடுவிலிருந்து பேசுகிறார்கள். வீட்டுக்குப்போய்ப்பார்த்தால் வெள்ளையாக விருக்கிறது. சில மேதாவிகள் தடபுடலாக மேடைகளினின்று பேசுகிறார்கள். சிலர் வளைத்து வளைத்து எழுதிவிடுகிறார்கள். ஒன்றுக்கும் பயப்படாதவர்கள் போலும் ஞானதீரர்கள்போலும் யாவு மறிந்தநுபவித்தவர்கள்போலும் காட்டிக்கொள்கிறார்கள். நெருங்க நெருங்கத்தான் வண்டவாளந் தெரிகிறது. வெளியிலே அட்டகாசஞ்செய்கிற ஆசாமிகளின் வீடுகட்குச் சென்றால் தெரியும்! பங்களாக்களில் சமயற்காரனிடத்தில் தனிச் சரக்கு வாங்கிக்கொடுத்துச் சாப்பாடு தயாரிக்கவேண்டி யிருக்கிறது. எல்லாம் வெளிமயக்குத்தான். "ஒய்யாரக்கொண்டையாம் தாளம்பூவாம் உள்ளே யிருக்குமாம் ஈரும் பேனும்"

⁂ ⁂ ⁂

முடியாது என்பதொன்று இல்லவேயில்லை. மனிதன் பொறுமையில்லாமையினாலேயே காரியங்களைக் கெடுத்துவிடுகிறான். தன் சக்திக்கு மேற்பட்ட காரியங்களைச் செய்யவேண்டுமானால் அளவற்ற பொறுமை வேண்டும். உலகத்திலே செய்கிற முயற்சி பயனற்றுப்போய்விட்டதென்றால் பொறுமையில்லாமல் தான் அது போயிருக்கவேண்டும். சில மனிதர் தாம் செய்யும் காரியங் கைகூடாவிட்டால் உடனே அதற்கு மாறுபட்ட காரியங்களில் இறங்க விரும்பி விடுகின்றனர். அத்துறையிலேயே காலமறிந்து முயன்றால் கட்டாயம் வெற்றிபெற்றுவிடலாம். "முயற்சிமட்டுங் குறையாதிருந்தால் முடியாததொன்றுமில்லை."

சதங்கை யொலி.

நல்ல தீர்மானம்.

மகமதியர்கள் பக்ரீத் பண்டிகையில் பசுவதை புரிவது வழக்கம். பசுக்கொலை பெரும்பாவமாதலின் ஹிந்து மக்கள் மிக்க வருத்தமுற்றிருந்தனர். ஆங்காங்கே பிரசாரங்களும் நடைபெற்று வந்தன. மகாத்மா உபதேசத்தால் ஹிந்துக்களும் மகமதியரும் ஒற்றுமைப்படவே ஆங்காங்கு நடைபெற்ற பசுக்கொலைகள் நிற்கலாயின. இந்தியாவின் வடமேற்கிலிருக்கும் மகமதிய ராஜ்யத்தின் அரசரான ஆப்கனிஸ்தான் அமீர் சில நாட்களுக்கு முன்னர் தமது ராஜ்யத்தில் பசுக்கொலை செய்யக்கூடாதெனத் தீர்மானித்துள்ள செய்தியை அறிந்தோம். அப்படியே இப்போது இந்திய மன்னர் குழுவில் சேர்ந்த பெரிய சமஸ்தானாதிபதியான நிசாம் அரசர் தமது எல்லைக்குள் பசுக்கொலை புரிதல் கூடாதென்று சட்டம் செய்திருக்கின்றனர். இது நல்ல தீர்மானம். அந்த இனத்தில் ஒன்றான ஆடுகளைக் கவனிப்பவர் யாவர்?

பெட்ரோல்.

பர்மாவிலும் இந்தியாவிலும் செலவாகிற பெட்ரோல் எண்ணெய்க்கு, காலன் ஒன்றுக்குத் தீர்வை ஆறணா விதிக்கப்பெறுகிறதென்றும், பர்மாவிலிருந்து அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிற எண்ணெய்க்குத் தீர்வை விதிக்கப்பெறுவதில்லையென்றும் அறிகிறோம். இவ்வாறு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் எண்ணெயின் பேரிலும் இந்தத் தீர்வையைப் போட்டால் இந்தியா கவர்ன்மெண்டுக்கு ரூபா. ௪,௫௧,௨,௪௮௫ கிடைக்கக் கூடுமாம். இப்பெருந்தொகையை இந்தியா கவர்ன்மெண்டார் பிற நாடுகளுக்குத் தருமஞ் செய்வதனால் இந்தியாவுக்குக் கிடைக்கும் நன்மை யாது?

இதுவும் தேவையில்லையோ?

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அச்சுக்கூடத்திலும் அச்சிடப்படுகிற ஒவ்வொரு புத்தகத்திலும் இரண்டு பிரதிகள் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படவேண்டுமென்பது சட்டம். அப்படி அனுப்பப்பெறும் புத்தகங்கள் எங்கு செல்கின்றன வென்பதைப்பற்றி அமிர்தபஜார் பத்திரிகையில் செயிண்ட் நிஹால் சிங், தனக்கும் கல்கத்தா இம்பீரியல் லைப்ரரியனுக்கும் நடந்த சம்பாஷணையை எழுதியுள்ளார். அதினின்றும் நாமறியக் கிடப்பதாவது, "இந்தியாவில் காபிரைட் லைப்ரரி ஒன்றுகூடக்கிடையாது. ஆதற்காக அனுப்பப்பெ

ளும் இரண்டு புத்தகங்களும் லண்டனிலுள்ள இந்தியா ஆபீஸுக்கு ஒன்றும் பிரிட்டிஷ் மியூசியத்திற்கு ஒன்றுமாக அனுப்பப் பெறுகின்றன." இதனைத் தடுக்கும் வன்மை இந்தியருக்கு இன்மையினாலேயே இவ்வாறு கொண்டு போகப்படுகிறதென்று மேற்படி லைப்ரரியன் கூறுகிறார். இதனைப்படிக்கும் ஒவ்வொருவர் உள்ளமும் வருந்துமென்பதிலையமில்லை. தமிழ் தெலுங்கு வங்காளி மராத்தி ஆங்கிலம் சம்ஸ்கிருதம் முதலிய பலவேறு பாஷைகளில் தினம் ஒன்றுக்கு ஆயிரக்கணக்காக இந்தியா அச்சுக்கூடங்களில் அச்சிடப் படும் புத்தகங்களின் பிரதிகள் இந்தியாவில் தொகுக்கப் படாமல் லண்டனில் சேமிக்கப்படுவதன் காரணமென்னவோ? அறிவு நிலையமும் இந்தியாவுக்குத் தேவையில்லை யென்று கருதப்படுகிறதுபோலும்!

கொலைமறுத்தற் பிரசாரம்.

சமீபத்தில் குட்டிவெட்டுப் பொங்கல்கள் ஆரம்பமாகும். சென்ற வருஷத்தில் அநேகம் அன்பர்கள் குட்டிவெட்டுதலை நிறுத்திப் பாற்பொங்கலே வைத்தனர். அதனால் அநேகம் ஆடு கோழிகளின் உயிர்கள் காக்கப்பெற்றன. அன்பர்கள் எல்லோரும் சென்ற வருஷத்தைப்போல் இவ்வருடமும் பாற்பொங்கலிடுவார்களென நம்புகின்றோம். இக்குட்டிவெட்டுப் பொங்கல்கள் நிகழும் இடங்கள், தேதி முதலியவற்றை விவரமாக ஆங்காங்குள்ள அன்பர்கள் நமது காரைச்சிவனடியார் திருக்கூட்டத்துக் காரியதரிசி அவர்களுக்கு முன்னதாகவே தெரிவித்தால் அங்கு வந்து பிரசாரஞ் செய்தல் கூடும். இவ்வருடப் பிரசாரத்திற்காக அச்சிடப்பெற்ற பிரசுரங்கள் வந்துவிட்டன. வேண்டுவோர் தபாற்செலவிற்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூர்ச் சிவன்கோவில்

நேற்று (தை ௧௪) மாலையில் அறுபத்துமூவர் மடத்தில் நகரக்கூட்டம் கூடியது. அதில், சிவன்கோவில் கொப்புடையம்மன் கோவில் மற்ற நகரப் பொது சம்பந்தமான எல்லாக் காரியங்களையும், இளையாற்றங்குடிக் கோவிலாரில் மூவரும், பிள்ளையார்பட்டிக் கோவிலாரில் மூவரும், மாத்தூர்க் கோவில் வயிரவன்கோவில் நேமங்கோவில் இரணியூர்க் கோவிலார்களில் தனித்தனி ஒவ்வொருவரும் ஆகப்பதின்மர் பார்த்து வருகிறதென்றும், இரண்டு கோவில்களின் நடப்புக்காரியங்களையும் வருஷமொன்றுக்குத் தனித்தனி இரண்டிரண்டு பேர்களாக இந்தப் பத்துப்பேர்களும் மாறி மாறிப்பார்த்து வருகிறதென்றும் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. இவ்விஷயம் இந்நகரவாசிகளனைவருக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும். இக்கூட்டங் கூடுவதற்கு முயற்சி செய்த அன்பர்களைப் பெரிதும் பாராட்டுகிறோம். மாசிமகத்தில் சிவன் கோவிலில் திருவிழா நடத்துவதெனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது.

திருத்தம்:—முதற்பக்கம் வணக்கம் ௨-ம் செய்யுளில் "பருகோட்டு" என்றிருப்பதை "பருகோட்ட" என்று திருத்திப்படிக்க.

வந்தது ஆபத்து.

(குட்டிச்சாத்தன் A. B. C. D. E. F. etc., எழுதியது.)

நம்முடைய நாடு சீரழிந்ததற்குப் பலகாரணங்கள். முற்காலத்திலிருந்த தமிழ்நாட்டு ராஜாக்கள் நூற்றுக்கணக்காகக் கோவில்களைக் கட்டினார்கள். ஆயிரக்கணக்கான கிராமங்களை விட்டார்கள்; நன்றாகப் பூசைநடந்தது. மாதம் மும்மாரி பொழிந்தது. இப்போது கோவிற்பூசை வழுவழுப்பாகவே எல்லாம் வறண்டுபோய்விட்டது. மற்றெல்லாம் ஒருபுறமிருக்கட்டும். கோவில்களைப் பண்டாரசந்நிதிகளிடமும் தருமகருத்தாக்களிடமும் ஒப்புவிக்கப்படுகின்றனவே! அவற்றின் நிலையென்ன? சில கோவிலில் நடக்கக்கூடாதெல்லாம் நடக்கின்றன. எண்ணெயுந் தண்ணீரும் போகிறவர் காலில் பிசுபிசுக்கிறது. எங்கும் அந்தகாரம். சிலவிடத்தில் வௌவால் காலில் மிதிபட்டுக் கத்துகிறது. கல்லோடு மண்ணுங் கலந்த சோறு காட்டப்படுகிறது. தேங்காயுடைத்தால் வரி. சாமி கும்பிட நுழைந்தால் வரி. யாத்திரை வரி. அர்ச்சனை வரி. தளிகைவரி. இத்தனை வரியும் வாங்கினாலும் கோவில் காரியங்கள் நன்றாக நடக்கிறதில்லை. பண்டாரங்களின் மடங்களில் நடக்கிற அநியாயம் கேட்கமுடியவில்லை. பண்டாரங்கள் சுகபோகங்களில் திரும்பிவிட்டார்கள். பலே ஷோக். வற்றக்காய்ச்சிய பால். பாதம் பருப்பு ஹல்வா. பட்டுமெத்தை. திண்டு. தலையணை. பல்லக்கு சவாரி. பக்கத்திலே ஜில். ஏக தமாஷ். கோவில் நாறி நாற்றமெடுக்கிறது. சாமியாருக்கு பங்களா வாழ்க்கை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் கடவுள். பொறுக்க முடியவில்லை. பொது ஜனங்களின் வாயால்—கையால் பேசச்செய்தார்; எழுதச்செய்தார். என்ன செய்தாலும் தாடிவாலாக்கள் காமக்கேளிகளின் மயக்கத்தினின்றும் அசைவதாயில்லை. பெரியோர் மனம் புழுங்கிற்று. இந்த சந்நிதானங்களின் அக்கிரமமும் கோவில்பூசையை நடத்தும் அன்பற்ற பிராமணர் செய்து வருகிற அக்கிரமமும் பொது ஜனங்களுடைய கூப்பாடும் கவர்ண்மெண்டின் புதிய சீர்திருத்தப் பூதத்தின் பெருஞ் செலவும் ஒன்று சேர்ந்து உருண்டு திரண்டு ஒன்றாகி "ஹிந்து மத ஸ்தாபன மசோதா"வென்று பேர் கொண்டு புறப்பட்டிருக்கிறது. ஐயோ பாவம்! இது பாஸாகிவிட்டால் பண்டாரங்கள் அலௌன்ஸ் பேர்வழிகளாகிவிடுவர். அலௌன்ஸ் பேர்வழிகளாவார்களானால் அவர்களுக்குக் கலியாணம் செய்து வைத்துவிடவேண்டுமென்று நான் சிபார்ஸ்செய்கிறேன். இனிக் கோவில்சொத்துக்கள் சந்திக்கு வரப்போகின்றன. தெருத் தெருவாக வரும். குப்பைமேட்டுக்கும் சாக்கடைக்கும் வரும். இங்கிலீஷ் வார்த்தையில் கலந்து வயிற்றுக்குள்ளேபோய் பிள்ளைகளை இங்கிலீஷ் பிள்ளைகளாக மாற்றிவிடும். பழைய தெய்வபக்தி குறையும். கும்பாபிஷேகம் சுமாராகத்தான் இனிமேல் நடக்கும். திருவிழாக்களும் நாகரிகமாகத்தான் நடக்கும். நவீனக்காரருக்கு தந்தா

லக் கோவிலில் நடப்பனவெல்லாம் "நான்சென்ஸாக"த் தோற்றும்! ஜனங்களில் யாராவது காணிக்கைபோடுவார்களா? அவைகள் கொஞ்சம் சுருங்கும். அன்போடு ஜனங்கள் பணம்போடமாட்டார்கள். பொதுவாக இந்த மசோதாவால் தெய்வபக்தி அடியோடு தொலையப்போகிறது. பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை கோவிலுக்குள் வருகிறதென்றுகூட எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்த மசோதா வராவிட்டாலும் பண்டாரங்கள் ஒழுங்காகவரமாட்டார்கள்.

முக்கிய அறிவிப்பு.

குமாரனுக்கு துந்துபி வருஷம் வைகாசி மாதமுதல் ருத்ரோத்காரிவருஷம் சித்திரை மாதம் முடிய ஒரு வருஷமாகின்றது. சித்திரை முதல் பங்குனி வரை ஒரு தொகுதியாக்குதல் அழகாயிருக்குமென்று பல அன்பர்கள் அறிவிக்கின்றபடியால் இந்த முதல் வருஷத்தின் தொகுதியை இந்த பங்குனி மாதத்தோடு முடித்துவிட விரும்பியுள்ளோம். ஆதலால் சித்திரைமாதம் வெளியிடவேண்டிய சஞ்சிகையின் ௩௨-பக்கங்களும் பங்குனி மாதத்திற்குள் சேர்த்து வெளியிடப்பெறும்.

மானேஜர் "குமரன்"

குமாரன்.

தமிழ் மாதம் க°உ வெளிவரும்.

வருஷ சந்தா.

உள்நாட்டுக்கு	ரூ க—அ—0
வெளிநாட்டுக்கு	ரூ உ—0—0

மானேஜர் "குமரன்"

காரைக்குடி.

1923-ம் வருஷத்தின்

8-அணு விலையுள்ள காலண்டர் இனாம்.

தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்:

விலாசம்:—

முஹையதீன் மெடிகல் ஹால்

வலங்கைமான். (தஞ்சை ஜில்லா.)

காரைக்குடி தனவைசிய ஊழியன் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்று சொ. முருகப்ப செட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பெற்றது.